ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்.

# சேதுநாடுந் தமிழும்.

[இரண்டாம்பதிப்பு.]

3184

ஸேதுஸம்ஸ்தானவித்வான்

ரா. இராகவையங்கார்

எழுதியது.

செந்தமிழ்ப்பிரசுரம்—௪௮.

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1928.

உ

# முகவுரை.

இந்தப்புத்தகம், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் ௯-ம் வருடவிழாக்காலத்தில் இராமநாதபுரத்திற் கூடிய மகாசபையிற் படிக்கப்பெற்று நல்லோருக்கும் மிக்க இன்பத்தை விளைவித்ததென்பதைப் பலர் அறிந்திருத்தல் கூடும்; அப்போது அங்கிருந்தவர்களில் யானும் ஒருவனே. இதற்கு ஒரு முகவுரை யெழுதவேண்டுமென்று சங்கத்தின் காரியதரிசியவர்கள் தெரிவித்தமையால் இதனை எழுதலானேன்.

பண்டைக்காலத்திலிருந்த புலவர்கள் அரசர்கள் உபகாரிகள் முதலியவர்களுடைய வரலாறுகளையும் பிறசெய்திகளையும் தெரிந்துகொள்ளுதலில் இக்காலத்தவர்களுக்கு மிக்க விருப்பமிருப்பினும் அவற்றை உள்ளபடியே தெரிவிக்கும் புத்தகங்கள் மிகச் சிலவே யுள்ளன. பழையநூல்களை முற்றும் படித்து இன்புறுதற்கு வேண்டியநேரமில்லாதவர்களுக்கு அவற்றிலுள்ள முக்கியமான விஷயங்களையும் சுவையான பாகங்களையும் தெரிவிக்கும் சிறிய வசனநூல்கள் மிகவும் உபயோகமானவை.

மக்களாய்ப்பிறந்த ஒவ்வொருவருக்கும் தேசாபிமானமும் பாஷாபிமானமும் இருத்தல் இன்றியமையாததென்பது யாவரும் அறிந்ததே. அந்த அபிமானத்தை ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமாகச் செலுத்துவர். ஆனாலும், தாம் பிறந்த தேசமே எல்லாவற்றினுஞ் சிறந்ததென்று காட்டுவதும் தமது தாய்ப்பாஷையின்பெருமையைப் பலரறியச்செய்வதும் சிறந்த வழிகளாகும்.

“சேதுநாடும் தமிழும்” என்னும் புத்தகமோ மேற்கூறிய நல்ல நோக்கங்களுக்கு ஏற்ப வடிவாற் சிறுகிப் பொருள்வகையாற் பெருகி ஆராய்ச்சிமுறையிற் சிறப்புற்று அமைந்து விளங்குதலால் தமிழபிமானிகளுக்கு ஒரு நல்விருந்தாக இருக்குமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இந்நூலையியற்றிய இராமநாதபுரம் ஸமஸ்தானவித்துவான் ஸ்ரீமத்: ரா. இராகவையங்காரவர்களை அறியாதார் யாவர்? இவர் தமது இளமைக்காலந்தொடங்கிக் கல்வி கேள்விகளிற் சிறந்து செய்யுள்செய்தலி

லும், பிரசங்கம்புரிவதிலும் மிக்க ஆற்றல்வாய்ந்திருப்பதுபற்றி அறிஞர்களால் முறையே நாவலரென்றும் பாவலரென்றும் பாராட்டப்பெற்று வருதலும், மதுரைத்தமிழ்ச்சங்கம் ஏற்பட்டகாலந்தொடங்கிச் சிலவருஷங்கள் செந்தமிழ்ப் பத்திராசிரியராயிருந்து வெளிவாராத பல அரிய செய்திகளையும், நூல்களையும் வெளிப்படுத்தித் தமிழுலகத்திற்கு உதவி புரிந்துவந்ததும் இப்போதும் ஓய்வுள்ளகாலங்களில் அரிய பிரசங்கங்களும் விஷயதானங்களும் செய்துவருதலும், அவற்றால் தமிழ்மக்கள் பெரும்பயனுற்றுவருதலும் தமிழகத்தார் அறிந்தனவே. ஆதலின், அவர்களா லெழுதப்பட்ட இந்நூல் எல்லாவகையிலும் சிறப்புற்றிருத்தல் நான் கூறாமலே விளங்கும்.

நூலாராய்ச்சிமுறை பண்டிதர்களால் அறியப்படாததென்று சொல்லுபவர்கள் இதனைப் படித்துப் பார்ப்பார்களாயின், அக்கொள்கையை அடியோடே விட்டுவிடுவார்களென்று நினைக்கிறேன். நிற்க.

சேதுவென்பது மிக்க புண்ணியஸ்தலமென்று வேதமுதலியவற்றால் மிகப் பாராட்டப்பெற்று ஒப்புயர்வற்ற சிறப்புவாய்ந்தது. சேதுநாடோ சேதுவைத் தன்பால் உடையதாய் இராமன் முதலிய அவதார புருஷர்களும் பிற பெரியோர்களும் தங்கப்பெற்ற பெருமையுற்றது. அந்நாட்டின் தலைவர்களாகிய சேதுபதிகளோ பண்டைக்காலந்தொட்டு இன்றுகாறும் பலவகைத்தருமங்களையியற்றித் தென்மொழி வடமொழிகளையும் பலவகைக் கலைகளையும் ஆதரித்துவருபவர்கள். தமிழ்மொழியோ ஆதிகாலந்தொட்டே தெய்வத்தன்மைவாய்ந்து ஒருவகையாலும் தளர்ச்சியடையாத ஏற்றமுடையது.

இந்த அரிய விஷயங்களை நன்கு விளக்கி எழுதுவதற்கு முன்வந்த நூலாசிரியருடைய அறப்பயனைப் பாராட்டுகின்றேன்.

சேதுவின் எல்லையும், சேதுநாடு முதன்மைவாய்ந்ததென்பதும், சேதுவேந்தர்கள் பழந்தமிழ்க்குடிகளென்பதும், அவர்கள் சேதுவின் பாதுகாப்பிற்காக இராமனால் நியமிக்கப்பெற்ற ஒரு தலைவருடைய வழித்தோன்றல்க ளென்பதும், அவர்களுடைய தெய்வபக்தியும், அவர்கள் செய்துவந்த ஆலயபரிபாலனம் சைவாதீனபரிபாலன முதலிய தருமங்களும், சேதுநாடே செம்பிநாடாயிற்றென்பதும், அந்நாட்டில் தமிழ்

மொழி வளர்ச்சியுறுதற்குக் காரணமும், நாட்டிலுள்ளவர்களிற் பெரும் பாலார் கல்விப்பயிற்சியுடையாரென்பதும், திருவாசகத்தில் தசாங்கத்தில் இறைவனுடைய ஊ ரென் று பாராட்டப்பெற்ற திருவுத்தரகோச மங்கைக்கு அத்திருநாமம் வந்ததற்குக் காரணம் அம்பிகையின் வினுக் களின் விடையாகிய ஞான நூல்களையுடைமைபா லென்பதும், "அடுக்கிய புல்லிற் கருணையங்கடலுயின்றனன்" என்று கம்பராற் பாராட்டப்பெற்ற திருப்புல்லாணிப்பெருமானுடைய திருவுருவம் தென்மொழி வடமொழி களின் வடிவமென்பதும், சங்கப்புலவர்களிற் சிலர், பிற்காலத்து நூ லாசிரியர்களிற் சிலர், உரையாசிரியர்களிற் சிலா, ஸ்ரீ கவிராசபண்டிதர் முதலிய சைவப்பெரியாரிற் சிலர், ஸ்ரீ மணவாளமாமுனிகள் முதலிய வைஷ்ணவ ஆசாரியர்களிற் சிலா் அவதரித்த இடங்கள் அந்நாட்டுள் இன்னவையென்பதும், சைவப்பெரியாராகிய ஸ்ரீ தாயுமானவர் பலநாள் இருந்துவிளங்கிச் சமாதியுற்ற இடம் அந்நாட்டினுள் இன்னதென்பதும், சேதுவேந்தர்பால் தங்கள் புலமையைப் புலப்படுத்தி ஊர்கள் முதலிய பலவகைப் பரிசுகள்பெற்றுப் பரம்பரையாக அவற்றை அனுபவித்துக் கொண்டு இன்புற்றிருக்கும் புலவர்களின் பரம்பரைகள் இன்னவென்ப தும், அவர்களாற் பட்டம்பெற்றவரின்னுரின்னுரென்பதும், அப்புலவர்க ளுள் இயற்றமிழ்ப்புலவர் இசைத்தமிழ்ப்புலவர் இன்னுரின்னு ரென்ப தும், மகமதியர் முதலியோர்களுள், சிறந்த தமிழ்க்கவிகள் இன்னுர், தமிழை ஆதரித்துப் புகழ்பெற்ற பிரபுக்கள் இன்னு ரென்பதும் இவை போன்ற பிற அரியசெய்திகளும் இந்நூலில் தக்க ஆதாரத்துடன் முறையே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

பின்னும், சேதுமன்னர்களிடத்து மந்திரிகளாக இருந்தவர்க ளுடைய அருஞ்செயல்களும் தருமபரிபாலனமும் அவர்கள் தமிழை ஆதரித்த அருமையும் அவர்கள்பெற்ற பிரபந்தங்கள் பாடல்கள் இன்ன வென்பதும் இதனுல் நன்குவிளங்குகின்றன.

எ-ஆம்பக்கத்திற் சே து ப திக ளை ஸ்ரீராமநாதமூர்த்தியாகவும் திருமாலாகவும் உபசரித்தல் மரபென்பதைக் காரணங்காட்டி விளக்கி யிருத்தலும், க0-ஆம்பக்கத்திற் பரிமேலழகரென்னும் பெயர்க்குப் பொரு ளெழுதியிருத்தலும் பிறவும் ஐயங்காரவர்களுடைய நுண்ணிய தேர்ச்சி வன்மையை விளக்குகின்றன.

இடையிடையே கொடுத்திருக்கும் சில புலவர்களுடைய அருமைப் பாடல்கள் படித்து இன்புறற்பாலன.

தமிழ்நூல்கள் பலவெளிவருதற்குத் துணையானது சேதுவேந்தர்களின்பொருளே என்று ஐயங்காரவர்கள் இந்நூலில் ஓரிடத்து எழுதியிருக்கிறார்கள். அதற்கு உதாரணம் பல இருத்தல்கூடும்; ஆனாலும், யான்வெளியிட்டுவரும் தமிழ்நூல்கள் பலவநுஷங்களாக இந்த மஹாராஜா அவர்களின் பொருளுதவியைப்பெற்றிருத்தல் அவ்வந்நூலின் முகவுரையால் நன்குவிளங்குமென்று அன்பர்களுக்குத் தெரிவிக்கின்றேன். சேதுவேந்தர்களின் கல்வி முதலிய விசேஷகுணங்களைப்பற்றியும் அவர்கள் தமிழ்ப்பாஷையிடத்து விசேஷ அபிமானம்வைத்து ஆதரித்துவருதலைப்பற்றியும் ஐயங்காரவர்கள் நன்றியறிவுடன் எழுதியிருக்கும் ஒவ்வொன்றும் உண்மையானதே; பலவற்றை நான் நேரிற் கண்டு இன்புற்றதுண்டு.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் இதுபோன்ற பல ஆராய்ச்சிநூல்களை ஐயங்காரவர்களைக்கொண்டும் பிற பண்டிதர்களைக்கொண்டும் எழுதுவித்து வெளியிடுவார்களாயின் தமிழ்நாட்டிற்குப் பேருபகாரமாக இருக்குமென்பது என்போலியர்களுடைய கருத்து.

இங்ஙனம்,

வே. சாமிநாதையர்,

மஹாமஹோபாத்யாயர்.

ஸ்ரீ:

# *சேதுநாடுந் தமிழும்.

தெய்வக்கொள்கையானும் தெய்வஞானங்களானும் அவைபற்றிய பெருநூல்களானும் எவ்வுலகுந் தோன்றுதொட்டே ஏத்துஞ் சிறப்புடைய இப்பாதகண்டத்துக்கு இருபெருவரம்பாகவுள்ளன ஸேதுவும் இமயமும் என்ப; "ஆஸேது ஹிமாசலம்" என்பது வழக்கு. இங்ஙனம் ஸேதுவையும் இமயத்தையும் இருபேரெல்லையாகக்கொண்ட இப்பாதகண்டத்தை வடநாடு, தென்னாடு என இரண்டாகப்பகுத் திடைநின்று விளங்குவது திருவேங்கடமெனுந்தெய்வமாமலையாம். திருவேங்கடத்துக்குவடக்கிலுள்ளமக்கள் வழங்குவது ஆரியம், வடமொழி எனவும், அதற்குத் தெற்கிலுள்ளமக்கள் வழங்குவது தமிழ் தென்மொழி எனவும் பெயர்பெறும். கல்வியிற்பெரிய கம்பரும் "வடசொற்குந் தென்சொற்கும் வரம்பிற்றாய் நான்மறைக்கு மற்றைநூற்கு, மிடைசொற்ற பொருட்கெல்லா மெல்லையதாய்....................ஓங்கியவேங்கடத்திற் சென்றுறுதிர் மாதோ" என்பதனா லிதனை விளக்கி யுரைத்தார்.

சேது என்பது சீராமமூர்த்தி கடன்மேலிட்ட திருவணை. இது கன்னியாகுமரிமுதற்றென்பது, மணிமேகலைநூலுள், மணிமேகலா தெய்வம் வந்து தோன்றியகாதைக்கட் "குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறைப், பரந்துசென் மாக்களொடு தேடினன் பெயர்வோன்" என வருதலா னறியப்படும். இதனாற் குமரியை யெல்லையாகக்கூறுமிடனெல்லாம் சேதுவைக்கூறின் அது தவறாகாதென்று தெளியலாம். இச்சேதுவை யணித்தாவுள்ள பூமி ஸேதுநாடு, ஸேதுராஜ்யம் என்று பெயர் சிறக்கும். இது மண்ணியனாடு பலவற்றுள்ளும் புண்ணியநாடென்று போற்றப்படும்.

இத்தகைராஜ்யம் பண்டுதொட்டே ஒன்றுண்டென்பது, சங்கர சோழனுலா வென்னும் பழைய தமிழ்நூலில்,

"..........................................போதகலா

மாதுமணக்குமணவாளன்சேதுக்குந்

---

*இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றாம் வருஷக்கூட்டத்திற் படிக்கப்பெற்றது.

தஞ்சைக்குங்கோழிக்குந்தாமப்புகாருக்கு
முஞ்சைக்குமேனையுதகைக்கும்—வஞ்சிக்குங்
கொற்கைக்குங்கூடற்குங்கோசலைக்குங்காஞ்சிக்கும்
விற்கைக்குநில்லாமிதிலைக்கு—நிற்கு
மரசனரசர்குலாந்தகனரப்
பிரசனபயர்பெருமான்"

எனப் பலநாடுகட்கும் முற்படவைத்துச் சேதுநாட்டை வழங்குதலாற் றெளிந்துகொள்ளலாம். இத்தமிழ்நூற்கேற்பவே ஆக்நேயபுராணாந் தர்க்கதமான புல்லாரண்யக்ஷேத்ரமஹாத்மியத்திற் ஸ்ரீராமமூர்த்தி, ஆங்குத் தன் ஸ்ரீபாதங்களைப் பாக்கியப்பேற்றாற் றெழுதுநின்ற நிஷாதத் தலைவனொருவனைத் தான் கட்டிய சேதுவைப் பரிபாலித்துவருமாறு நிய மித்தருளினன் என்று கேட்கப்படுதலானு மிதனுண்மை வலியுறும்.

இந்நிஷாதத்தலைவனு மிவன்வழியினரும் குறுநிலமன்னராய்நின்று செந்தமிழ்வளர்த்த செல்வப்பாண்டிய ரென்னும் முடியுடைப்பேரரசர்க் குப் போர்ப்படைத்தலைவராய் மூற்காலத்தி லிருந்தனராவர். இவ்வொற் றுமையாற் பாண்டிநாட்டுள்ள சேதுவுக்கும் பாண்டியரே பேரரசராதல் பற்றி, மதுரைத் தமிழ்க்கூத்தனர் கடுவன்மள்ளனர் என்னும் பழைய சங்கப்புலவர் எழுபஃதாம் அகப்பாட்டில்,

"..................................புதுவது,
பொன்வீ ஞாழலொடுபுன்னை வரிக்கும்
கானலம்பெருந்துறைக்கவினிமாநீர்ப்
பாசடைக்கவித்தகணைக்காஎனய்தல்
விழவணிமகளிர்தழையணிக்கூட்டும்
வென்வேற்கவுரியர்தொன்முதுகோடி
முழங்கிரும்பௌவமிரங்குமுன்றுறை
வெல்போரிராமனருமறைக்கவித்த
புல்வீழாலம்போல
வொலியவிந்தன்றிவ்வழுங்கலூரே"

என்பதனாற் றிருவணையாகிய சேதுமுன்றுறையைக் கவுரியராகிய பாண்டியருடையதென் றுசொற்றார்.

இதன்கட் ஸ்ரீராமமூர்த்தியார் தாமும் பரிகாமுமாகச் சில இரக சியம் விசாரிக்கப்புக்கபோது இக்கடற்கரையினுள்ளதோ ராலமரத்துப்

பறவைகள்கூக்குரல் அதற்குத் தடையாதல்கண்டு அவை யொலியடங்கக் கையமைத்தருளினார் என்பது கேட்கப்படுகின்றது. இச்செய்தி நிகழ்ந்ததலம் இப்போது நவபாஷாணமென்று பெயர்சிறந்ததென்பதும் இக்காரணம்பற்றியே ஆங்குக் கடலும் ஒலியவிந்துளதென்பதும் நாம் பழைமையாய்க் கேட்பனவேயாம்.

தஞ்சையையாண்ட நாயகர்குலத்துத் திருமலாம்பா என்னும் பெண்மணியால் மிகவு மினியதாகச்செய்யப்பட்ட வரதாப்யுதயம் என்னும் வடமொழிக்காவியத்தில் ஸேதுபதியாசரை, "ரக்ஷித்வா ஸேதுநாயம் ஶரணாகதம் பாண்ட்யராஜாத்மஸம்ஶ்ரயம்" என்பதனால் ஸேதுநாதன் என்றும் பாண்டியவரசர்க்கு நண்பர் எனறுங் கூறப்பட்டுள்ளது. பாண்டியர்க்குத் துணைவராய் நெடுங்காலம் ஸ்வதந்த்ரராய்ப் போந்த ஸேதுபதிகள் திருமலை நாயகர் மதுரையை யாளத்தொடங்கியபோது திருமலை நாயகர்மந்திரி ராமப்பையன்*சூழ்ச்சியாற் பெரிய குலபரம்பரையை மட்டும் உடையராய்ச் சிறுகியநிலையி லெஞ்சிய பாண்டியவரசரோடு பகைத்துப் பின் நாயகர்க்குச் சில காலம் அடங்கியிருந்தன ரென்பது,

"திரமேறவிசுவநாதத்திருமலேந்திரன்
சித்தமகிழ்ராமப்பையன்
செங்கோட்டுவேலருடனுமைபாகனைத்தொழுது
திக்குவிசயஞ்செய்தனன்

உரமானதென்கடற்றிருவணையடைத்தன
னுலகுநாற்பதிலக்கமும்
ஒருகுடைக்கீழாகவாக்கினைபுரிந்தனன்
னுடையவன்மனதுவரவே

துரமானமலையாளருங்கொள்ளைகொண்டனன்
றுட்டரைக்கழுவேற்றினன்
சோரரையொடுக்கினன்குருவியழகன்றலை
துணித்தனன்பாண்டியரையும்

---

*ராமப்பையன்விஷயமாக ஓரம்மானைநூல் சென்னைக் கையெழுத்துப் புத்தகசாலையி லுள்ளது. அதன்கண் ஸேதுபதிபோரில் ராமப்பையனை எதிர்த்துப் பொருதுபட்டவன் ஸேதுபதிமருமகனாகிய வன்னித்தேவன் என்று கூறியுள்ளது.

பொரமாறவிட்டுச்சடைக்கனையடக்கினன்
பூசுரர்கடேவர்பதியும்
பொலிவுறநடத்தினன்சந்த்ரசூரியரளவு
புகழ்நிலைநிறுத்தினனே."
(திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை.)

என்னும் பழையபாடலா னறியப்படுவது. இது ஸேது *சடைக்கத்தேவர்காலத்து நிகழ்ந்ததென்பது இதனாற் றுணியலாம். பின் மதுரை நாயகர்கள் கருநாடர்படையெடுப்பிற்கு ஆற்றாதநிலையிற் ஸேதுவேந்தருதவிபெற்றுக் கருநாடரை வென்றபோது ஸேதுபதிகட்குப் பழைய ஸ்வதந்த்ரமுற்றும் அளித்தனரென்ப. ஸேதுபதியேவலால் நாயகர்க்குத் துணையாய்நின்று கருநாடரை வென்றவன் தெய்வகன்னி யென்னு மந்திரி. இதனானே "ஏலனவாருகர்த்தாக்கள் மெச்சுஞ் சவியாமதிமந்த்ரி மா தெய்வகன்னி" என்று சிறப்பிக்கப்பெற்றானவன்.

சேதுபாண்டிய னென்ற பெயர்வழக்கம் இச்சேதுகாவலர்மரபினர்க்குள் அதிகமாகக் காண்டலானும் சேதுபற்றிப் பாண்டியர்க்குள்ள தலைமை நன்றாகிக்கப்படும். இப்பாண்டியரும், இவரோ டொருதன்மையராகிய சேர சோழரும் படைப்புக்காலந்தொட்டே மேம்பட்டுவருதலுடைய பழைய தமிழ்க்குடியினராவர். "வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி, பண்பிற் றலைப்பிரித லின்று" என்னுந் திருக்குறளுரையில் ஆசிரியர் பரிமேலழகர் பழங்குடி யென்பதற்குத் தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட்பிறந்தா ரென் றுரைகூறித் தொன்றுதொட்டுவருதல் - சேர சோழ பாண்டிய ரென்றாற்போலப் படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டுவருதல் என விளக்கினர். இதனானும், வான்மீகிபகவான் சீராமாயணத்து ஸுக்ரீவன் வானரசேனையை நாடவிட்டதருணத்துப் பாண்டியர்செல்வச்சிறப்பையும் அவரது கபாடபுரத்தையும் சேர சோழ ராச்சியங்களையும் எடுத்தோதுதலானும் இவர் பழைமை நன்குணரப்படும்.

இத்தமிழ்வேந்தர் மூவரும் ஆறங்கமும் நிரம்பிய முடியுடைப்பேரரசர்தலான் இவர்பழைமைகூறியதனானே இவர்க்குப் படைத்துணையாய்த்

---

*சடைக்கத்தேவர் என்பது சடைக்கோத்தேவர் என்பதன் மரூஉ. சடைக்கன் என்பது சடைக்கோன் என்பதன் மரூஉ. இவருக்கே தளவாய் என்றொரு பெயரும் உண்டு.

தொன்றுதொட்டுமுள்ள வீரர்பழைமையுங் கூறியதேயாம். இவ்வீரர் பாண்டியன்மறவர் சேரன்மறவர் சோழன்மறவர் என்று வழங்கப் படுவர். இம்மறவரைப்பற்றி யான் செந்தமிழ்ப்பத்திரிகை நடாத்திய காலத்துச் சேதுபதிகள் என்ற வியாசத்தில் நிரம்ப எழுதினேனாதலா லீண்டைக்கு வேறே கூறாமல் விடுக்கின்றேன்.

பாண்டியர் தலைமைக்குள்ளாய இச்சேதுநாடு, சோழர் பாண்டியரை வென்று பாண்டிநாட்டிற் பெரும்பகுதியைத் தந்நாடாக்கிக் கொண்டகாலந்தொடங்கிச் செம்பிநாடாய், இந்நாட்டு மறவர், சோழன் மறவராயகாரணத்தாற் செம்பிநாட்டுமறவரெனப் பெயர்பெற்றனராவர்.

சேதுநாட்டையே செம்பிநாடென்றுகொண்டு, சேதுவைப்படைத்துச் சேதுராஜ்யத்தை ஆதியில் உண்டாக்கியளித்த ஸ்ரீராமமூர்த்தியைச் சேதுநாட்டான என்று துணிந்து அவனையே செம்பிநாட்டான் என வழங்குதலும் உண்டென்பது தஞ்சைச் சரசுவதிநிலயபுத்தகசாலைக்கணுள்ள புல்லையந்தாதிக்கண்,

“காட்டானைக்குறுதுயரங்காட்டானைத்திருமருவிக்களிக்குஞ்செம்பி
நாட்டானைப்பவத்திலெம்மைநாட்டானைக்கசடரையெந்நாளுஞ்சேர
மாட்டானைப்புரந்தபசுமாட்டானைப்பிறவியிடைவணங்கினேரை
வீட்டானைப்பரமபதவீட்டானைப்புல்லையினும்விரும்பினேமே.”

என வருதலா னறியப்படுவது. இதன்கட் டிரு மருவிக்களிக்குஞ் செம்பி நாட்டான் எனப் பாடுதலான் இந்நாட்டின் புண்ணியவிசேடம் நன்றுணரலாகும். சீராமமூர்த்திக்குப் பிறந்தவுரிமையானே கிடைத்தகங்கை நாட்டினும் வெற்றியாற்படைத்த ஸேதுநாடு சிறந்தது என்று தோன்றத் திருமருவிக்களிக்குஞ் செம்பிநாடு என்றார். கங்கைநாடாட்சி எத்துணை யோர்கைப்பட்டுப் பலபல மாறுதலடைந்துநிற்க, இச் சேதுநாடாட்சியொன்றுமட்டும் சீராமமூர்த்தியி னருள்பெற்ற சிலைவேடர்குலமுறையினிலைபெற்றுவருதலானே இப்புண்ணியநாட்டிற்கு அத்தெய்வாநுக்கிரகம் மிகவுண்டென்பது ஊகித்தலாகும். அத்தெய்வம் வீடணற்கு முடி வழங்கியநாடும் இதுவாதல் நினைக்கத்தகும். “தாருக்களுள் அசுவத்தமுமாவேன்” என்று கண்ணன் கீதையி லருளிச்செய்தபடி திருப்புல்லாணித்தலத்துத் தெய்வம் திருவசாய்நின்று தன்னிழலிற் சேதுநாட்டரசைவைத்துக் காக்கின்றதென்ப. திருப்புல்லாணியில் பகவான் அசுவத்தரூபியாய்நின்றளித்தலை,

"பெருவயிறுகண்டமாலையுதரவலியண்டவாயு
பிரமியகிரந்திசூலைதலைநோவும்
இருமலொடுதந்தவாயுகுருடுசெவிடுஞ்சொலூமை
யிவைகண்முதலெருந்தரோகவினையாவும்
ஒருநொடியிலஞ்சியோடும்வறுமையொடுசெஞ்சிதாதி
யுபரியினடைந்தபாவமவைதாமும்
மருமலர்பிறந்தகோதைமருவிமகிழும்புலாணி
வளராசகண்டபேரையணுகாவே".*

என்னும் பழையபாடலா லுணர்ந்துகொள்க. இவற்றாற் சேதுநாடு செம்பிநாடு என வழங்குதலும், இந்நாட்டிற்கு மற்றைநாட்டினும் மேம்பட்டுள்ள தெய்வீகச்சிறப்பும் தெளியலாகும். சீராமமூர்த்தி திருவணை கட்டும்போது இந்நாட்டுச் சிறுவிலங்கும் இயன்ற உதவிசெய்து அவன் திருக்கரத்தால் வருடப்பெற றுய்ந்தன வெனபது தொன்றுதொட்டுக் கேட்கப்படுவதாம். தொண்டரடிப்பொடியாரும், "குரங்குகண் மலையை நூக்கக் குளித்துத்தாம் புரண்டிட் டோடித்—தரங்கநீ ரடைக்க லுற்ற சலமிலா வணிலம் போலேன்" என இதனைச் சிறப்பித்தல் காண்க.

இப்போதும், சேதுநாட்டினைச் சேர்ந்ததாகவுள்ள 'மணக்குடி' என்ற ஊரையுடைய இடையளநாட்டை,

"வளவர்காக்கும்வளநாட்டுள்ளு
நாடெனச்சிறந்தபீடுகெழுசிறப்பிற்
கெடலருஞ்செல்வத்திடையளநாட்டுத்
தீதில்கொள்கைமூதூருள்ளு
மூரெனச்சிறந்தசீர்கெழுமணக்குடி"

என நெடுந்தொகைக் கருத்துரைப்பாயிரத்துக் கூறியதனாலும், சேது நாட்டுத் தொண்டிப்பட்டினத்தையுடையாகவைத்துச் சிலப்பதிகார வூர்காண்காதைக்கண் "வங்கவீட்டத்துத் தொண்டியோ" ரென்று சோழரைக் கூறியதனாலும் பாண்டியாட்சிக்குள்ளாய இச்சேதுநாட்டுப் பெரும்பகுதி சோழராட்சிக்குள்ளாயசெய்தி துணியப்படும்.

---

*தஞ்சைச் சரசுவதிநிலயத்துத் திருப்புல்லாணிவிஷயமாகக் காணப்பட்ட பலவற்றுள் இஃதொன்று.

இச்சேதுநாடாண்ட மறவர் தலைவரெல்லாம், இவ்விருவேந்தர்க்கும் போர்த்துணையாய்நின்றகாரணம்பற்றியே பாண்டியமண்டலஸ்தாபனாசாரியன், சோளமண்டலப்ரதிஷ்டாபகன் என்னும் விருதாவளிசூடினராவர். இவ்விருதாவளி இவருடைய பழையசாசனங்களிலெல்லாங் காணலாம்.

சிங்களநாட்டை ஆண்ட ஆரியசேகரன் பாண்டிநாட்டைக் கைப்பற்றியகாலத்துச் சேதுகாவலன் என்ற சிறப்புப்பெயரைச்சூடிச் சேதுநாடாட்சியைமதித்துப் பாராட்டினான் என்பது,

"போதுபோனதுவந்ததுதனிமையும்புகுந்ததுபனிவாடை
தூதுபோனவண்டிவ்வழிமறந்ததுசொல்லுவதினியேதோ
ஓதுவார்புகழ்மணவையரதிபதியோருலகொவ்வாதான்
சேதுகாவலனாரியசேகரன்றிருவுளந்தெரியாதே."

என்னும் பழையபாடலா னுணரப்படுவது. இவன் சிங்களம் ஆண்டதும் இவன் பெருங்கொடையும் வென்றியும் பிறவும்,

"பாவலன்வாசலில்வந்திபம்வாங்கப்படிபுரக்குங்
காவலர்நிற்கும்படிவைத்தவாகண்டியொன்பதினும்
மேவலர்மார்பினுந்திண்டோளினுஞ்செம்பொன்மேருவினுஞ்
சேவெழுதும்பெருமான்சிங்கையாரியசேகரனே."

என்னும் தமிழ்நாவலர்சரிதைப்பாட்டா னறிக. இதன்பின் இப்பாண்டிநாட்டை மாவலிவாணாதிராயர்கள் வென்று ஆண்டகாலத்தும் 'ஸேதுமூலரக்ஷாதுரந்தரன்' என்று பெரும்பெயர் புனைந்துகொண்டனரென்பது சென்னைச் சிலாசாசனபரிசோதனை (585 of 1902) யிற் கிடைத்துள்ள "மகாமண்டலேச்வரன், பூபாலகோபாலன், புவனேகவீரன், சமரகோலாகலன்,................ஸேதுமூலரக்ஷாதுரந்தரன், மூவராயர் கண்டன், பட்டர்மானங்காத்தரன், இறந்தகாலமெடுப்பித்த சுந்தரத்தோளுடையார் மாவலிவாணாதிராயர் பிருதிவிராஜ்யம் பண்ணியருளாநின்ற சகாப்தம் ருசாஙு-ன் மேற் செல்லாநின்ற நாளில்...............திருக்கானப்பேர்நயினார்க்கு" என வருதலான் அறியலாகும். சுந்தரத்தோளுடையார் என்பது திருமாலிருஞ்சோலைமலையழகர் திருப்பெயர்களுள் ஒன்று. இவற்றாற் பாண்டியர், சோழர், ஆரியசேகரன், வாணாதிராயர், என்னப்பட்ட பல பேரரசரும் இச்சேதுகாவலைப் பெரும்புண்ணியமாக

மதித்துப் பெயர்பெற்றனரென்பது உணரலாகும். இவர்கள்காலங்களில், சேதுபதிகள் இவர்கள்கீழ்க் குறுநிலமன்னராய் நிலவினராவரென்றுய்த்துணரலாகும்.

இனி மூவேந்தருட் செந்தமிழ்ச்சங்கஞ் சீர்பெற ஓம்பியகாரணத்தாற் றமிழுடையாரென்று நல்லிசைப்புலவராற் புகழப்பட்ட அறிவுடைப்பாண்டியராட்சிதொட்டே புண்ணியமுடைமையானன்றிச் செந்தமிழ்க்கல்வியானுமிச் சேதுநாடு சிறந்ததென்பதற்குச் சான்றாகச் சில கூறுவேன்.

கொற்கையினும் மதுரையினும்வளர்ந்த நறுந்தமிழ் மணம் அவற்றுக்கு மிகவும் அணித்தாய இச்சேதுநாட்டு வீசாதென் றியார்தாஞ் சொல்லத்துணிவர். பொன்னுங்கால் அமுதகவிராயரும் ரகுநாதசேதுபதியைப் புகழுமிடத்து,

"பால்வாய்ப்பசுந்தமிழ்வீசியவாசம்பரந்தவையைக்
கால்வாய்த்தவீரையர்கோன்ரகுநாதன்"

எனப் பாடுதல் காண்க. பரமேதிகாச க்ஷேத்ரமாகவும், சரணாகதிதர்மம் விளைந்த பெருநிலனாகவும், கருணாகரன் ஸர்வஜீவர்க்கும் அபயப்ரதானம் அருளிய திவ்யஸ்தலமாகவும், இச்சேதுநாட்டுக்கோர் திலகமாகவும் விளங்கும் திருப்புல்லாணி எனப் பெயர்பூண்ட தர்ப்பசயனத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸர்வேச்வரன் ஞானஸ்வரூபியாதலை உலகெலா மறிந் துய்யவேண்டி ஆழ்வார் திருமங்கையார் பேரியதிருமடலென்னுந் திவ்யப்ரபந்தத்துப் 'புல்லாணித் தென்னர்தமிழை வடமொழியை' என்று பணித்தருளியசிறப்பு இந்நாட்டின் கல்விச்சிறப்புப் பற்றியதென்று நன்குணர்ந்துகொள்க. தெய்வமே தென்மொழி வடமொழியாக மூர்த்திகரித்தமர்ந்தருளியது இச்சேதுநாட்டுக்கே சிறந்ததென்று துணியப்படும். திருப்புல்லாணியில் ஸ்ரீபலியெம்பெருமானைத் "தென்னன்றமிழான்" என்று வழங்குவதுங் காண்க.

இன்னும், அத்தலத்து மூர்த்தியை "வேதமுமானு" னென்றும், "அன்னமாய் நூல்பயந்தா" னென்றும் ஆழ்வார் வழங்கியருளுதலையும் நோக்குக. இப்பெருமையெல்லாங் கருதியே சேதுபதிகள் இத்திருக்கோயிலிற் பெருந்திருப்பணியெல்லாம் முற்றுவித்தனராவர்;

"எனதன்மமாயினுந்தான்கற்பகாலமிருக்கவுன்போன்
மனதினினைந்தபடிசெய்யயார்க்கும்வராதுகண்டாய்
கனதனமால்திருப்புல்லாணிக்கோபுரங்கட்டிவைத்த
தனதவிஜயரகுநாதசேதுதளசிங்கமே"

என மிதிலைப்பட்டி அழகியசிற்றம்பலக்கவிராயர்பாடியதனு னிதனை யுணர்க. சேதுநாட்டுக்கு மூலகாரணனுன சீராமமூர்த்தியைக் கல்வியிற் பெரியரான கம்பர், "தென்சொற்கடந்தான் வடசொற்கடற்கெல்லை தேர்ந்தான்" என்றே பாடினர். சீதாப்பிராட்டியாரைத் தேடவிடும்போது அநுமானை வேறுகொண்டு சீராமமூர்த்தி, "இராவணன் தேவபாஷை யறிந்தவனுதலான் அதனைச் சீதைமுன் போதாது மாநுஷபாஷையி லிரகசியங்களெல்லாவற்றையும் ஓதுக" என்று கூறியருளினனென்று வான்மீகிபகவானிராமாயணத்துக் கேட்கப்படுதலாற் சீராமமூர்த்திக்கும் சீதாப்பிராட்டிக்கும் அநுமானுக்கும் அவ் விருமொழிவன்மையும் உண்டென்று நன்று தெளியலாம். அவர் திருவருள்பெருகிய இச்சேது நாட்டுக்கு அவ்விருமொழிவன்மையு முண்டாத லொருதலை. இச் சேதுநாட்டி னொருபகுதியாய நாட்டரசன்கோட்டையூர்ப்புறத்து நாடு வடகலைவேள்விநாடாதலையும் தெளிந்துகொள்க.

இனிப் "பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடு, முத்தரகோசமங்கையூர்" என்று திருவாதவூரடிகளாற் றிருவாய்மலர்ந் தருளப்பெற்ற திருவுத்தரகோசமங்கைத்தலத்தைத் தன்கட்கொண்ட பெருஞ்சிறப்பானும் சேதுநாட்டின் கல்வி ஞானமேம்பாடே தெளிவிப்ப தாகும். வடக்கட் கைலையங்கிரியினிருந்த ஞானநூல்களும் உமாதேவி யாரும் ஒருகாரணத்தான் இத்திருவுத்தரகோசமங்கைப்பாக்கத்துத் தோன்றியருளி, உமாதேவியார் முன் கேளாதனவெல்லாம் இத்தலத்தே சிவபிரான்பாற் கேட்டருளினுள் என்பது இத்தலபுராணத்தாற் றெரிந் தது. இது திருவாலவாயுடையார்திருவிளையாடற்புராணத்தானுந் தெளியத்தகும்.

இஃதன்றி, அறிவாற் சிவனென்று சிறப்பிக்கப்பட்ட திருவாதவூ ரடிகள் திவ்யஞானம்பெற்ற திருப்பெருந்துறையும் இச்சேதுநாட்டதே யாயின் இதன்பெருமையை யாமே எடுத்துரைக்கவல்லேம்? இச்சேது நாட்டுள்ளாய திருவுத்தரகோசமங்கைத்தலத்தைத் தன்கட்கொண்ட தென்பாண்டிநாட்டையே "ஏழ்பொழிற்கு, நாதனமையாளுடையா னுடு"

என்று திருவாதவூரடிகள் சிறப்பித்தவாற்றானும், உலகெலாமுடைய சிவபிரானைத் "தென்னாடுடைய சிவனே போற்றி" என்று இச்சேதுநாடுடைமையாற் புகழ்ந்தருளியவாற்றானும் இதன் ஞானமேம்பாடு நன்றுணரலாகும்.

இக்காரணங்களானும், இதன் புண்ணியவிசேடங்களானும் இச்சேதுநாடொன்றே நாடென்றுவழங்கப்படும்போதும்; இதனை, "ஊரெனப்படுவ துறையூர்" "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" "கோயிலென்பது கோன்றிருவரங்கம்" "கோயிலென்பது குளிர்பொழிற்றில்லை" என்பன போலக் கொள்க. நாட்டரசன்கோட்டை யென்பதுக்குச் சேதுநாட்டரசனுடைய அரண் என்பதே பொருளாதலானும், புகார்ப்பட்டினம் விட்டுச் சேதுநாட்டுக் குடிபுக்க பண்டையோர்வழியினராகிய வணிக நன்மக்களெல்லாம் இன்றும் நாட்டுக்கோட்டையாரென்றே பெயர் சிறத்தலானும், திருமலைச்சேதுபதியைப் படிக்காசுப்புலவர் "நாட்டிற் சிறந்த திருமலையா" என்று விளித்துப் பாடுதலானும் இதனுண்மை ஊகிக்கப்படும். முன்பு புகார்நகரத்தாராய்ப் பின்பு இப்புண்ணியநாடுபுக்க வணிகநன்மக்கள் நாட்டார் என்று பெயர்சிறந்த சேதுநாட்டாரினின்று தம்மை வேறுபிரித்துணரவே நகரத்தார் என்று வழக்குப்பெற்றாராவரென்றுன்னுதல்கூடும்.

இங்ஙனம் புண்ணியமும் ஞானமுந் தழைத்த இச் சேதுநாடாட்சி பெற்ற பாக்கியவான்களாகிய சேதுபதிகளை வைணவரெல்லாம் "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்" என்னுமுறையாற் சீராமமூர்த்தியாகவும், சைவரெல்லாம் சீராமநாதமூர்த்தியாகவும் உபசரித்து உசித மரியாதைசெய்தலும் இந்நாட்டுத் தொன்றுதொட்ட மரபாம். இதனை,

"சேதுபதியென்றுநரசென்மமெடுத்தாய்கமல
மாதுபதிக்குன்பேர்வாய்க்குமா—பூதலத்தி
னீயோசுராமனின்னையேபெற்றெடுத்த
தாயேயருட்கோசலை"

என வழங்கும் பழைய வெண்பாவானும்,

" ஆதிபதியானமண்டலாதிபதிவம்சபதியரசர்க்கென்று
நீதிபதிசத்ரபதிசமஸ்தானபதிவிஜயநிறைந்தேநிற்கு

மாதுபதிதுரகபதிகஜபதிநராதிபதிவளர்தென்றேவைச்
சேதுபதிதரிசனமோராமலிங்கதரிசனமாச்செப்பலாமே"

என்று வழங்கும் பழைய விருத்தத்தானும் நன்கறிந்துகொள்க.

இவருடைய புண்ணியநாடு தமிழிற் பெரிய ஞானிகட்கு மிடமாய தென்பது, சைவத்திற் சிறந்த ஞானயோகியாகிய ஸ்ரீ தாயுமானவர் நெடுநாட் டங்கிச் சமாதியடைந்தருளிய மூகவையும், விசதவாக்சிகா மணியாய் வைஷ்ணவாசாரியராய்த் தெய்வமும் அழைத்துப்பேசுந் தூயஞானமும் உடைய மணவாளமாமுனிவர் வளர்ந்து சிறந்த சிக்கற் கடாரமும் தன்பாற்கொண்டுவிளங்குவதனுற் பலரும் அறியத்தக்கது. இவ்விரண்டு ஞானசாரியர்களும் பாடியருளிய தமிழ்ப்பாடல்களின் பெருமை கற்றூரறிந்ததே. மணவாளமாமுனிவரைத் தெய்வம் அழைத்துப்பேசியருளிய செய்தி,

"நாமார்பெரியதிருமண்டபமார்நம்பெருமாள்
தாமாகவென்னைத்தனித்தழைத்து—நீமாறன்
செந்தமிழ்வேதத்தின்செழும்பொருளைநாளுமிங்கே
வந்துரையென்றேவுவதேவாய்ந்து"

என்று அவர் ஈடுபட் டோதியருளிய வெண்பாவா னறிந்தது. இவர் திருவாலியிற் றிருமங்கைமன்னனைச் சேவிக்கப்புக்கபோது பாடியருளிய பாடல்:—

"ஈதோதிருவரசீதோமணங்கொல்லை
யீதோதிருவாலியென்னுமூர்—ஈதோதான்
வெட்டுங்கலியன்வேல்வெற்றிதிருமாலெழுத்
தெட்டும்பறித்தவிடம்," என்பது.

அவர் சேவித்தபோது பாடியருளியது:—

"உறைகழித்தவேலையொத்தவிழிமடந்தைமார்தமே
லுறையவைத்தமனமொழித்தவ்வுலகளந்தநம்பிமேற்
குறையைவைத்துமடலெடுத்தகுறையலாளிதிருமணங்
கொல்லைதன்னில்வழிபறித்தகுற்றமற்றசெங்கையான்
மறையுள்வைத்தமந்திரத்தைமாலுரைக்கவவன்முனே
மடியொதுக்கிமனமொடுக்கிவாய்புதைத்தவ்வொன்னலார்
கறைகுளித்தவேலணைத்துநின்றவிந்தநிலைமையென்
கண்ணைவிட்டகன்றிடாதுகலியனுணையாணையே."

என்பது.

இவராசியரான திருவாய்மொழிப்பிள்ளையின் அவதாரஸ்தலம் குந்தி நகரமென்ப. இதுவே கொந்தகையென்று இப்போது வழங்குவதாம்

இனிப் பழைய சங்கப்புலவர்க்குள்ளும் இச்சேதுநாட்டே பிறந்தார் பலருண்டென்பது அவரவர் ஊரா லுணரப்படுவது. பிசிராந்தையார் என்ற நல்லிசைப்புலவர் கோப்பெருஞ்சோழற்கு உயிர்த்துணைவரென்பதும், அவன் வடக்கிருந்ததனைத் தம்முள்ளத்துணர்ச்சியானே உணர்ந்து தாமாகவே அவன்பாற் சென்று தாமும் வடக்கிருந்து அவ்வரச னுடன் உயிர்துறந்தவரென்பதும், அப்புலவர் பாண்டிநாட்டுப் பிசிர் என்னும் ஊரினர் என்பதும் பிறவும் புறநானூறு கற்றார் பலரும் அறிந் தனவே. அத்தகைப் பெரியார் பிறந்து சிறந்த பிசிர் என்னும் ஊர் இச்சேதுநாட்டு அலங்காரனல்லூர் (அலங்கானூர்)க்கு அடுத்துள்ள பிசிர்க்குடி என்பதாகும். நல்லந்தையார் என்பார் நற்றிணை 211 ஆம் பாட்டுப் பாடியவர். இவருடையவூர் கோட்டியூர். இது சிவகங்கையைச் சார்ந்த பெரிய திவ்யஸ்தலமென்பது பலரும் அறிந்ததே. இத்திருப் பதியைப் பாடியருளிய ஆழ்வார் திருமங்கைமன்னர், "கோவையின் றமிழ் பாடுவார்தொழுந் தேவதேவன் திருக்கோட்டியூர்" என்று சிறப்பித் தருளுதலான் இவ்வூர்க்கண் அகப்பொருட்டமிழ்பாடும் புலவ ரிருந்தன ரென்று குறித்தருளினாராவர். இவ்வூரே 'அல்வழக்கொன்றுமில்லாவணி கோட்டியர்கோ னபிமான துங்கன,' 'தளிர்ந்தசீல னயாசல னபிமான துங்கன' என்று பெரியார் சிறப்பித்த செல்வநம்பிக்கும், அவர்வழி யினராய் ஸ்ரீவைஷ்ணவபரமாசாரியராகிய ஸ்ரீராமாநுஜமுனிவரால் பதி னேழ்தரம் சென்று வழிபடப்பெற்ற திருக்கோட்டியூர்நம்பிக்கும் அவ தாரஸ்தலம் என்பது பலரும் அறிவர். திருக்கோட்டியூர்நம்பிகள் தனியன் வருமாறு:—

"விசயன்வினையொழித்தமெய்ப்பொருளைப்பூதார்
வசையின்முனிக்களித்தவள்ளல்— திசைகமழும்
தேமலர்ப்பூஞ்சோலைத்திருக்கோட்டியூர்நம்பி
தாமரைப்பூந்தாளேசரண்"

அள்ளூர்நன்முல்லையார் குறுந்தொகை 32-ம்பாட்டும் நெடுந்தொகை 46-ஆம் பாட்டும் பாடியவர். இவ ரள்ளூர் இச்சேதுநாட்டுச் சிவகங் கையைச் சார்ந்துள்ளது. வெள்ளைக்குடிநாகனார் நற்றிணை 158-ஆம்

பாட்டுப் பாடியவர். இவரூர் சேதுநாட்டுத் திருவேகம்பத்துச்சேகரத்துள்ளது. ஒக்கூர் மாசாத்தியார்பாடியன குறுந்தொகையினும் நெடுந்தொகையினும் பலபாடல்களுள்ளன. இவருடைய ஒக்கூர் மேற்காட்டிய கோட்டியூர்ப்பக்கத்தே யுள்ளது. பதினெண்கீழ்க்கணக்கினு ளொன்றாகிய கைந்நிலைபாடியவர் புல்லங்காட னெனப்படுவர். புல்லங்காடு, புல்லாரணியம்; இது திருப்புல்லாணியேயாகும்.

இத்தகைப் பெருந் தமிழ்ச்சங்கப்புலவரெல்லாம் பிறந்துசிறந்த இச்செந்தமிழ்ச் சேதுநாட்டி லிழிகுலச்சிறுவரும் அறிவான்முதிர்ந்தவராவரென்பது பாண்டியனைக்காண்பான் இச் சேதுநாட்டுநெறியேபுக்க கம்பர், நாட்டரசன்கோட்டைக் காட்டில் எருமைமேய்ப்பார் இளையர் சிலரைக் கண்டு முடிக்கரைக்கு நெறி யாதென்று வினவியபோது அவர் அடிக்கரைபிடித்தேகின் முடிக்கரையெய்தலாகுமென்று கூறக்கேட்டு அதன்பொருள் தெரியாது திகைத்துப் பின் றெளிந்து,

"கருங்காலிக்கட்டைக்குநாணுக்கோடாரி
யிருங்கதலித்தண்டுக்குநாணு—மருங்காகக்
காட்டெருமைமேய்க்கின்றகாளையர்க்கேயாந்தோற்றோம்
நாட்டரசன்கோட்டைநகர்க்கு"

என்று பாடியதனான் அறியலாகும். இதனை, முத்துநாயகப்புலவர் தாமியற்றிய "கண்ணுடையம்மைபள்ளு" என்னு நூலில்,

"வாசமானதென்பாண்டிநன்னாடு மதுரைநாட்டில்வளருமிந்நாடு
காசினிக்குட்கதிர்க்கின்றநாடுமுன் கம்பர்வந்து துதிக்கின்றநாடு
பூசுரர்க்கன்னதானஞ்செய்நாடு புலவர்மேலபிமானஞ்செய்நாடு
ராஜலக்ஷுமிகண்ணுடையாளருள்நல்குநாட்டரசன்கோட்டைநாடே"

எனப் பாடியவாற்று னறிந்துகொள்க. இச்சிறப்பெல்லாந் தெரிந்தே இந்நாட்டரசன்கோட்டைக் கண்ணுடையம்மைகோயிற் கொடிக்கம்பமண்டபம் முதலிய திருப்பணிகள் ஸேதுபதிகளா லியற்றப்பட்டனவென்றெண்ணுகின்றேன். அந்நூலிற் "கனவிஜய ரகுநாத ஸேதுபதி செய்த கொடிக்கம்பமண்டபம்புகழக் கூவாய்குயிலே" என வருதலான் இஃது தறியப்படும். இச்சேது நாட்டு நாட்டரசன்கோட்டைக்கண் இவ்வம்மையருளால் அவித்தநெல் முளைப்பதை யின்றுங் காணலாம்; இதனை,

"கண்ணுடையதாய்மகிமைகாசினியோரிவ்வளவென்
றெண்ணுடையதாய்மதிக்கவேலாது—மண்ணுடைய
புன்மூளைக்கவெத்தனைநாட்போகுமுடனேயவித்த
நென்மூளைத்தல்சான்றுநிசம்"

என்னும் பாடலா னறிக.

இங்ஙனம், கல்வியிற்பெரிய கம்பராற்புகழப்பட்ட பெருஞ்சிறப்பே யல்லாமல், உலகெலாம் கவிராக்ஷஸன் எனவும், கவுடப்புலவனெனவும், கூத்தன்கவிச்சக்கரவர்த்தி யெனவும் ஏத்தும் கல்விச்சிறப்புடைய ஒட்டக்கூத்தர் பிறந்தது மலரி யென்பது காட்டுவேன். கம்பர்திருமகனார் அம்பிகாபதியார்க்குத் திருமகனாராகிய தண்டியென்னுந் தமிழாசிரியர், தாம் பாடிய அலங்காரநூற்கண்,

"சென்றுசெவியளக்குஞ்செம்மையவாய்ச்சிந்தையுள்ளே
நின்றளவிலின்பநிறைப்பவற்று—ளொன்று
மலரிவருங்கூந்தலார்மாதர்நோக்கொன்று
மலரிவருங்கூத்தன்றன்வாக்கு"

என்னும் வெண்பாவாற் செவியளந்துகொண்டு சிந்தையுள்ளே நின்று அளவிலின்பநிறைக்கும் வாக்கையுடைய கூத்தரை மலரியென்னும் ஊரின்கண்வந்தவ ரென்றார். இந்நூலுரைகாரரும், மலரி ஒரூர் என்று ரைத்தார். இவ்வூர் இச்சேதுநாட்டு ராஜசிங்கமங்கலச்சேகரத்துள்ளது*. இதன்கண்ணே வாழ்ந்த செங்குந்தர்வழியினர் பலர் வேற்றூர் புக்கு வாழ்கின்றனர். இவர் முதலிகள் எனப்படுவர். தமிழ்நாவலர் சரிதையுடையாரும் கூத்தரைக் கூத்தமுதலியாரென்றே வழங்குதல் காண்க.

இத் தொன்னூலாசிரியரை யன்றிச் செந்தமிழ்த் தொன்னூல்கட்குரையிட்ட நல்லாசிரியரும் இச்சேதுநாட்டுண்டென்று காட்டுவேன்.

"நெடுந்தொகைக்குக் கருத்து அகவலாற்பாடினான் இடையளநாட்டு மணக்குடியான் பால்வண்ணன்றேவனான வில்லவதரையன்" என்று அகநானூற்றுரையேட்டிற் காணப்பட்டது.

---

* இதிலுள்ள காளிகோயில் மிகப் பிரசித்திபெற்றது. "காளியொட்டக்கூத்தன்" என்ற வழக்கும் ஈண்டு நினைக்கத்தரும். சோணாட்டுப் போளத்துக்கடுத்தும் மலரி என்ற ஊர் ஒன்றுள்ளது தெரிகின்றது. (செந்தமிழ்த்தொகுதி உரு. பக்கம் நசரு-நசஅ.)

மணக்குடியென்பது ஸேதுநாட்டு உப்பூருக்குவடக்கணுள்ளதோரூர். இதன்பக்கத்தே இன்றும் உப்பளமுள்ளது. இவ்வூருடைய நாட்டை அளநாடென்றும், அந்நாட்டுக்கு வடக்கும் அந்நாட்டுக்குத் தெற்கும் பல அளங்களிருத்தல்பற்றி அஃது இடையளநாடு என்று வழங்கப்பட்டதென்றுந் தேறலாகும்.

இனித் தமிழிற் சிறந்த பெருநூலாகிய திருக்குறட்கு உரையியற்றினார்பல்ருள், பரிப்பெருமாள் என்று பெயர் சிறந்தார் பிறந்து வளர்ந்ததும் இத் தமிழ்ச் சேதுநாடேயாம். இதனை,

> "தெள்ளிமொழியியலைத்தேர்ந்துரைத்துத்தேமொழியா
> ரொள்ளியகாமநூலோர்ந்துரைத்து—வள்ளுவனார்
> பொய்யற்றமுப்பாற்பொருளுரைத்தான்றெனசெழுவைத்
> தெய்வப்பரிப்பெருமாள்தேர்ந்து"

என்னுஞ் சிறப்புப்பாயிரத்தா லறிக. இவ ருரைப்பாயிரம் வருமாறு:—

> "மாயிருஞாலத்துமன்பொருள்விளக்கும்
> ஆயிரங்கதிருமாழ்கடன்மறைந்தபின்
> விரிகதிர்மதியும்விளங்காக்காலத்
> தெரிதலைக்கொளீஇயசிஃறிரிவிளக்கி
> னரியவும்பெரியவுமறிந்தோர்போல
> வசையில்வள்ளுவன்வாய்மொழிப்பொருளை
> இசைபடநுவல்வோரிறந்தபின்னர்
> நன்மதியுடையோர்நாடாராய்தலின்
> என்மதியளவின்யானறிந்துரைத்த
> மழலைக்கிளவியைமதியோராயிந்
> திகழ்தலன்றியேயாவையுமியைத்துத்
> திருத்தியுரைத்தல்வேண்டும்
> அருத்தம்பயில்வோரருங்கடனெனவே"

> "புதியதுதீதுபழையதுநன்றென்றல்பூமியுள்ளோர்
> விதியதுவேபொருளென்னன்மினல்லோர்விழுப்பமுண்டேற்
> புதியதுநன்றுபழையதுதன்னினும்பூமடந்தை
> பதியதன்மேவிற்பருமுத்தொடாடையைப்பார்மின்களே"

> "கண்ணுமுகமுங்கருங்குழலுஞ்செவ்வாயும்
> வண்ணமுலையும்வனப்புடைத்தென்—றெண்ணிக்
> கருத்தறியார்சாரலுறுங்காளையர்நேர்முப்பாற்
> கருத்தறியாதுட்பொருள்காண்பார்"

"நல்வினைசெய்பவர்நாடொறும்வந்திக்கநான்முகனுர்
தொல்லுரையைத்தென்றமிழாலறியத்துகடபுசீர்
இல்லறமுந்துறவும்பொருட்பக்கமுமின்பமுமாம்
பல்வகையாலருளுந்திருவள்ளுவன்பாதங்களே."

என்பனவாம். இவருரை தலையா பரிமேலழக ருரைப்பின்சார நன்று என்று தெளியலாகும். பரிப்பெருமாளைப் பரி என்றுகொண்டு, அவ ரினும் உரைவன்மையான் அழகுடையாராதலாற் பரிமேலழகரெனப் பட்டாரோ என்று ஊகிக்க இடனுகின்றது. அத்தகைத் திருக்குற ளுரையாளருடைய தென்செழுவை இச்சேதுநாட்டதேயாம். மேற் காட்டிய வெண்பாவினுல் இப் பரிப்பெருமாள் சொல்லிலக்கண நூலொன் றும், காமநூலொன்றும் ஆராய்ந்துரைத்துள்ளாரென்று தெளியப்படும்.

இவர்க்குப்பின் இச்சேதுநாட்டுப்பிறந்து சிறந்த புலவர்தொகையை எண்ணி இனைத்தெனல் இயலாததொன்றேனும் என் சிற்றறிவுக்கியன்ற வரை முயன்று சிலரைப்பற்றிக் கூறவெழுகின்றேன்.

சேதுநாட்டைச்சார்ந்த வேம்பற்றூர் ஒன்றிலே செவ்வைச்சூடுவார் என்பார் பாகவதபுராணம் தமிழிற் பாடினுர். இஃது ஆரியப்பப்புலவர் பாகவதம் என்று தவறுக வெளியிடப்பட்டது இத்தவற்றைப்பற்றி முன்னரே செவ்வைச்சூடுவாரும் அனதாரியும் என்ற தலைப்பிட்ட வியா சத்தில் யான் செந்தமிழ்க்கண் எழுதியுள்ளேன். ஆளவந்தாரென்பார் வாசிட்டநூலைத் தமிழிற்பாடினுர். பெரும்பற்றப்புலியூர்நம்பி என்ற மாதவபட்டர் திருவாலவாயுடையார்திருவிளையாடலைப் பாடினர். திரு வாலவாயுடையார் திருவிளையாடலைத் தமிழிற்பாடிய மாதவபட்டரும், அவர் குலத்திலேயுதித்து வாசிட்டநூலைத் தமிழிற்பாடிய ஆளவந்தா ரும் சேதுநாட்டு வீரசோழனூரினராவர். இதனை வாசிட்டநூலிறுதிச் செய்யுளில்,

"ஆளவந்தான்வீரையின்மாதவபட்டனம்சவவதாரமாகி
மீளவுந்தான்வந்துதமிழ்வசிட்டராமாயணமும்விளம்பினனே."

என வருதலா னறிக. மாதவபட்டருக்குப் பெரும்பற்றப்புலியூர்நம்பி என் றொருபெயரு மூண்டு. இவர்கட்கு வேம்பற்றூரினும் நிலனும், கொள்வதுங் கொடுப்பதும் உண்டாதலான் இவர்களை வேம்பற்றூரின ராகவும் வழங்குவர். கவிராஜபண்டிதர் என்பார் சௌந்தரியலகரியைத்

தமிழிற் பாடினர். பெருமாளையர் நெல்லைக்கோவை பாடினர். சாமி கவிகாளருத்திரரென்பார் அழகர்பிள்ளைத்தமிழ் பாடினர். கவிகுஞ்சர பாரதி என்பார் அழகர்கலம்பகம் பாடினர். இவ்வோரூர்ப் புலவரைப்பற்றி எழுதப்புக்கால் அஃதொரு பெருநூலாகுமென்பது திண்ணமாக இவ்வூர்போலப் பல்லாயிர மூர்களையுடைய இச்சேதுநாட்டுப்புலவரை அளக்கப்புக்க என் மதியின்மைதா னென்னே?

இவ்வோரூரில், செவ்வைச்சூடுவார்முதல் நம் காலத்துத் தமிழ்க் கவிதைகளைச் சுவைபலவமைத்து விரைவாகப்பாடுதலாற் பெயர்சிறந்து இம்மகாசபைக்குச்சிரோரத்தினம்போலவிளங்கும் நம் மாட்சிமை பொருந்திய சேதுபதிமஹாராஜாவர்களாலும் அவர்கள் அறிவுடைத்தந்தையாராலும் சிலேடைப்புலியென்று பட்டஞ்சூட்டி ஆதரிக்கப்பெற்ற பிச்சுவையரிறுதியாக நூற்றுக்கணக்கான புலவர்கள் தமிழறிவாற் சிறந்து விளங்கினராவர். இப்பிச்சுவையர் தந்தையார் சாமா சூரியநாராயண பாரதியார். இவர் தம்மூர் பஞ்சம்பட்டபோது பாடிய வெண்பா:—

"காணூர்முதலாகக்கல்லூருணிவிளைய
வானமிடித்து மழைபொழியா—தேனைக்
குளம்பெருகிநில்லாகொடுமறையோர்செய்த
விளம்பிவருடவினை." என்பது.

இவருநட் டேவியருள்பெற்ற கவிராஜபண்டிதர் இச்சேதுநாட்டு வீரசோழனென்னும் ஊரிலே நெடுங்காலம்வதிந்து இறுதியிற் றுறவியாய் ஆங்கே சமாதிகொண்டனர். இவர்க்குச் சௌந்தரியலகரிவடநூலைத் தமிழிற் பொருள்கூறிய ஆசிரியர் பிரமாதிராயர் என்பார். இவர் சத்தியருள்பெற்றவர். இவர் மதுரைமீநாக்ஷியம்மையடியிட்ட பூமாலை திருக்கழுத்திற் றானே ஏறப்பாடித் தன்னொடு வாதித்த புலவனை வென்று, *நல்லூர், கடம்பை இவ்வூர்களைப் பரிசிலாகப்பெற்றவர்.

கவிராசபண்டிதருடைய திருக்குமாரர் நெல்லைவருக்கக்கோவை பாடியவர். அவரிளம்பிராயத்தே பிற்காலத்துப் பாண்டியனொருவன் தென்காசி, மதுரை, திருநெல்வேலி, கருவை என்னும் நாலூர்ப்பெயரும் இந்நாலூர்ச் சுவாமிபெயரும் அம்மைபெயரும் அமைத்து ஒரு கலித்துறை பாடுக என்றபோது பாடிய,

---

*நல்லூர் - நல்லூர்க்குறிச்சியென்பது. கடம்பை-கடம்பங்குளம்; அதனையடுத்துள்ளது.

"இலகேழகிலத்தர்சொக்கர்முத்தீசரிபங்தொழுவோர்
கலைதேர்தென்காசிமதுரைநெல்வேலிகருவைவந்த
பலர்கேள்வருள்ளிரெம்பங்குநிற்பீர்வந்துபாதந்தொழ
வுலகேகயற்கண்ணியேவடிவேயெங்களொப்பனையே"

என்ற செய்யுள் தமிழ்வல்லார் அறிந்ததே. இவரை, "வீரையம்பிகாபதி" யென்றே நெல்லைவருக்கக்கோவைப் பாயிரத்திற் கூறுதல் காண்க. சேதுபதிநாட்டு வீரசோழனிற் கவிராசபண்டிதர்சமாதியுண்மை பலரும் அறிவர்.

இவரேயன்றித் திருச்செந்திற்பிள்ளைத்தமிழ், சீவகசிந்தாமணிச் சுருக்கம் இவற்றை மிகவும் இனிக்கப்பாடிய பெருந்தமிழராகிய பகழிக் கூத்தர், இச்சேதுபதிகள் செம்பிநாட்டுச் சன்னசிக்கிராமத்தவரேயாவர். இஃது,

"ஆரநாண்மலர்நெட்டிதழ்க்குவளையகவயலி
லகடுநொந்தொருகோடிசங்
கடைகிடக்கக்குருகுபெடையெனச்சிறகா
லணைத்திடுஞ்செம்பிநாட்டு
வீரநாராயணச்சதுர்வேதமங்கலம்
விளங்கவேவந்தநெடுமால்
வேதியர்குலாதிபன்றர்ப்பாதனன்புதல்வன்
மிக்கபகழிக்கூத்தனே"

எனச் சிந்தாமணிச்சுருக்கத் தவையடக்கச்செய்யுளில் வருதலாற் கண்டது, இவர் கிருஷ்ணபக்தர் என்பது,

"செந்தமிழ்க்குவாய்த்ததிருச்செந்திற்பதிவாழுங்
கந்தனுக்குப்பிள்ளைக்கவிசெய்தா—னந்தோ
திருமாதசேர்மார்புன்றேர்ப்பாகற்கன்பு
தருமால்பகழிக்கூத்தன்"

என்னும் பழையபாட்டா னுணர்க. பகழிக்கூத்தர் என்பது சேதுநாட்டுப் புகலூர் ஐயனார் திருப்பெயர். தர்ப்பாதனன் என்பது திருப்புல்லாணித் திருமால்பெயர்.

வீரை ஆசுகவிராயர்:—இவர் அரிச்சந்திரபுராணவிருத்தம் பாடியவர். இவருடைய செய்யுணடை தமிழ்மக்களுக்கு அளவிலின்பம் பயப்

பது. இவரது ஊர் நல்லூர்வீரையெனப் படுவது. நல்லூர்வீரையென்பது சேதுநாட்டு விசுவனூர்ச்சேகரத்துள்ள நல்லூரையடுத்த வீரையேயாம். இந்நல்லூர் குலோத்துங்கசோழநல்லூர் என்பதாம். இதுவே சேதுபதிகள் பழையசாசனங்களிற்கண்டவூராம். இவர் தம் அரிச்சந்திர புராணத்தைத் திருப்புல்லாணிச் சக்கரதீர்த்தக்கரைமேன்மண்டபத்தில் அரங்கேற்றினரென்பது அந்நூற்பாயிரத்தா லறிந்தது.

"விதியினரசிழந்தவரிச்சந்திரன்றன்
வியன்கதையாம்வெண்கதையைவிருத்தமாக்கி
அதிவிதமாங்கலியுகத்தில்வருசகாத்த
மாயிரத்துநானூற்றுநாற்பத்தாறிற்
சதுமறைதேர்புல்லாணித்திருமான்முன்னே
சக்கரதீர்த்தக்கரைமேன்மண்டபத்துட்
கதிதருசீர்நல்லூர்வாழ்வீரையாசு
கவிராசன்கவியரங்கமேற்றினனே"

என்பது இந்நூற் பாயிரம். "வீரனுசுகவி" என்னும் பாடமாயின் நல்லூர் இவருடைய ஊர் என்க.

இனித் தண்டலையார்சதகம், தொண்டைமண்டலசதகம்முதலிய நூல்களையியற்றிப் புகழ்படைத்த படிக்காசன் என்னும் புலவர் இந்நாட்டுக் கீழைக்கரையில் ஔரங்கசீப்முதலிய மகமதிய அரசர் மெச்ச வாழ்ந்த சீதக்காதியென்று பெயர்சிறந்த பெரியதம்பிமரக்காயரென்னும் பெருங்கொடைச்செல்வரை வாயாரவாழ்த்திய இனிய பாடல்களும் அவ்வள்ள லிறந்ததற்கு ஆற்றாது உள்ளமுடைந் துருகிப்பாடிய பாடல்களும் ஈண்டுப் பலரும் அறிந்தனவேயாதலா னவற்றை யான் பெயர்த்துங் கூறேன். இச்சீதக்காதிவள்ளல் சேதுபதியாற் பெரிதும் அன்புபாராட்டப்பட்டவரென்பது இவர்போரானுள்ள நாடகநூலான் அறியப்பட்டது. அத்தகைப்புலவர்,

"மூவேந்தருமற்றுச்சங்கமும்போய்ப்பதின்மூன்றுடெட்டுக்
கோவேந்தருமற்றுமற்றொருவேந்தன்கொடையுமற்றுப்
பாவேந்தர்காற்றிலிலவம்பஞ்சாகப்பறக்கையிலே
தேவேந்த்ரதாருவொத்தாய்ரகுநாதசெயதுங்கனே"

என்று பாடி இச்சேதுகாவலருடைய பெருங்கொடையும் தமிழாதரிப்பும் உலகறியப் புகழ்ந்தனர்.

மற்றும், மகமதியமதத்தினரெல்லாம் உச்சிமேற்கொண்டுபோற்றும் நபிநபினர்சரிதமாகிய சீறப்புராணத்தை அம்மதத்தினரல்லாத தமிழறிவாளரும் கல்வியின்பத்தால் விழைந்து கற்குமாறு அத்துணைச்சுவைத்தாக ஐயாயிரம்பாடலாற்பாடிய உமறுப்புலவரென்னுந் தமிழ்நாவலர் இச்சேதுநாட்டுக் கீழைக்கரையிற் சிறந்தாராவர். இவருடைய கவித்துவத்தையும் உயர்குணத்தையுந் தெரிதற்கு ஸ்தாலீபுலாகநியாயமாக இரண்டு செய்யுட்களை யெடுத்துக்காட்டுவல்.

"புரசைக்கடக்கரிகணிரைதட்டறக்குவிரர்புவியைப்படக்கடவியே
சாகுற்றநற்பதவிவழியிற்புகுத்தியுயர்தலைமைக்குவைத்தபெரியோர்
பிரசத்துளித்திவலைசிதறிக்கிடக்குமிருபிணையற்புயத்துநயினர்
அரசுக்குவைத்தநெறிவரிசைக்குமிக்கதுரையபுபக்கரைப்புகழுவாம்"

"படித்தலத்தெழுகடல்குலகிரிவிலைபதற
வெடுத்துவீசியசண்டமாருதத்தினுக்கெதிரே
மிடித்துநொந்தசிற்றெறும்பொருமூச்சுவிட்டதுபோன்ம்
வடித்தசெந்தமிழ்ப்புலவர்முன்யான்சொலுமாறே"

இவற்றின் சொன்னோக்கும், பொருணோக்குந் தொடைநோக்கும் நடைநோக்குங் கற்றார்க்குப் பெரிதும் இன்பம்பயக்குமென றெண்ணுகின்றேன். இவர்வழியினர் மீசலவண்ணக்களஞ்சியப்புலவர் வண்ணம் பல பாடியவர். அவர்வழியினர் இன்றும் இச்சேதுநாட்டுத்தலைநகராகிய முகவைக்குப்பக்கத்துப் பனைக்குள மென்ற ஊரி லுள்ளனர்.

இவ்வுமறுப்புலவரும், திருப்பூவணவுலா ஆப்பனூர்ப்புராணம்: இவை பாடிய கந்தசாமிப்புலவரும் கீழைக்கரையிலிருந்த சீதக்காதிப்பிரபுவிடத்திருந்து, அவரா லாதரிக்கப்பெற்றவரென்பது, சீதக்காதிபேரிலுள்ள நொண்டிநாடகத்தா னறியப்படுவது. நல்ல தமிழறிஞராகிய இக் கந்தசாமிப்புலவர் இச்சேதுநாட்டின் ஒருபகுதியாகிய சிவகங்கையையாண்ட முத்துவடுகநாதேந்த்ரனைத் தம் உலாவில் "மன்போசன்முத்துவடுகநாதேந்த்ரனருள், பொன்போலுமாடை புனைந்தருளி" என்பதனாற் சிறப்பித்துரைத்தார். [இவ்வுலா நூல் உலகம்புகழுந் தமிழாசிரியராய் இந் நல்லவையை யலங்கரித்துவிளங்கும் நம் மஹாமஹோபாத்யாயரவர்களால் நன் கச்சிடப்பட்டுள்ளது.]

இன்னும், இம்மதத்தினராகிய சவ்வாதுப்புலவர் சேதுபதி வசூரியான்வருந்தியபோது இராசராசேசுவரிபஞ்சரத்னம் பாடி அவரை வச்ரதேகியாக்கிச் சுவாத்தன் என்னும் விளைபுலவூரை முற்றூட்டாகப் பெற்றசெய்தி இந்நாடெலாம் அறிந்ததேயாம். இவர் முகைதீன்ஆண்டவர்பிள்ளைத்தமிழ் பாடியவர். இவர் இச்சேதுநாட்டு எமனீச்சரத்திற் பிறந்து சிறந்தவர். இவர் திருவநந்தைவேந்தர்முன்போய்த் தம் சேதுபதியைப் புகழ்ந்து பாடிய,

"கிளையாளன்சேதுபதிரகுநாயகன்கிஞ்சுகவாய்
இளையார்கலவியிடத்துநம்மீசரிடத்துமன்றி
வளையாதபொன்முடிசற்றேவளையுமகுடமன்னர்
தளையாடியகையிற்காளாஞ்சியேந்துஞ்சமயத்திலே"

என்னு மினியபாடல் கல்லாத தமிழருமுண்டோ"

"கல்விதறுகணிசைமைகொடையெனச்
சொல்லப்பட்டபெருமிதநான்கே"

என்றபடி இவர் கல்வியானுண்டாயபெருமிதம் மிகவும் உடையார் என்பது, "கலைமதங்கொண்டிடு சவாதுக் கவிச்சரப காம்பீர்ய துங்கனென்றும்" எனத் தம்பிபட்டி முத்துவேலாயுதக்கவிராயர் ஓலைத்தூக்கிற் கூறுதலானறியப்பட்டது.

"வெண்டாமரையனந்தன்வேற்றுருக்கொண்டுற்றனளோ
தண்டாமரையனந்தன்றுணிவனோ—வண்டமிழி
னெண்ணேயெழுத்தோவிசையோவியற்புலவர்
கண்ணேசவாதுக்கவி"

என்னும் பழையபாட் டிவர்கல்வித்திறத்தை விளக்கும்.

இன்னும், இவர்காலத்தே சருக்கரைப்புலவரென்பார் தம் கவித்திறத்தானும், இராமாயணமுதலிய பெருங்காப்பியங்கட்கு உரைசொல்லும்வன்மையாலும் இச்சேதுபதிகளாற் பெரிதும் பாராட்டப்பட்டுப் பொன்னெட்டிமாலையும் ஊரும் வாகனங்களும் அளிக்கப்பெற்றனராவர். இவர் சேதுபதியைப் பாடிப் பெற்ற ஊர்கள் சிறுகம்பையூர், கொந்தலாங்குளம், கோடிகுடிமுதலியன கண்ணங்குடிச்சேகரத்துள்ளன. இவர் பாடியது திருச்செந்தூர்க்கோவை. இவரியற்றிய உரை வேதாந்தசூடா

மணிச் சித்தாந்தவுரை. இவர் இவ்வுரை நூல் சேதுபதிமந்திரியாகிய தாமோதரனென்பார் வேண்ட இயற்றியதென்பது,

"உரைதருவேதாந்தசூளாமணியுட்பொருளை
யுலகிலுளோருணரவுரைசெய்கவெனக்கடல்சூழ்
தரையரையன்சேதுபதியமாத்தியனுந்தாமோ
தரன்கங்காகுலதிலகன்றகுதிபெறச்சாற்ற
வரையறுத்துச்சித்தாந்தப்பொருட்டிறனுந்தோன்ற
வகுத்தனனற்றுறைசைநமச்சிவாயதேசிகன்றாள்
பரவுசிவக்கொழுந்துநிதியருள்கல்விக்கடலைப்
பருகுமுகில்சர்க்கரைநற்பாவலவர்கோனே"

என்னும் பாயிரத்தா னறியப்படுவது. இப்பாயிரப்பாட்டுச் சருக்கரைப் புலவருடன்கற்ற இராமநாதபுரம் சாமிநாதப்புலவர் பாடியது. ஈண்டுக் குறித்த சேதுபதிபிரதானி தாமோதரனென்பார் வேள்விக்கோவை கொண்டவர்.

இச்சருக்கரைப்புலவர்வழியிற் புலவராய்ப் பெயர்சிறந்தார் பலருளர். மிழலைச்சதகம், வண்டுவனப்பெருமாளுசல், திருவாடானைச் சித்திரகவிமஞ்சரி: இவை சின்னச்சருக்கரைப்புலவர் பாடியன. மிழலைச் சதகம், பிரதாபசிம்மமஹாராஜர் தஞ்சையையாளுங்காலத்தில் வேங்கடாசலமால் மந்திரியாகவும், மாணிக்கவாசகவேள் சம்பிரதியாகவும் உள்ள சமயத்தில் வெள்ளாற்றுப்பாய்ச்சல் மிழலைநாட்டிற் குடியேறி உபகாரிகளாகவிருந்த துளுவவேளாண்மக்களைச் சிறப்பித்து அவர் ஏர்வளம்பாடியதாகும். இது கல்வியிற்பெரிய கம்பர் பாடிய "ஏரெழுபது" முறையைப் பின்பற்றியது. இவற்றை,

"தருதஞ்சையாளும்ப்ரதாபசிம்மேந்த்ரதருமன்மெச்ச
வருமணிமாமுத்திரைவேங்கடாசலமால்சம்ப்ரதி
நரதுங்கமாணிக்கவாசகவேள்சபைநாளையிலே
உரைசெய்மிழலைச்சதகத்தைச்சர்க்கரையோதினனே."

"அடுக்கப்படிக்கின்றசெந்தமிழ்ப்பாவலராரிளையுந்
தடுக்கப்படிக்கின்றகல்விகல்லாரிந்தத்தாரணியிற்
கொடுக்கப்படிக்கின்றகல்விநன்றாய்வந்துகூடியபின்
னடக்கப்படிக்கின்றநாட்டார்மிழலைநராதிபரே."

“பொன்மாரிபெய்யினுமெப்போதுமேகம்புயலைச்சிந்தி
வின்மாரிபெய்யினுமென்றுமுயிர்க்கதின்மேன்மையுண்டோ
சொன்மாரிபெய்யுமிழலைகன்னாட்டுத்தளுவர்செய்யில்
றென்மாரிபெய்யும்பொழுதேயுலகம்நிலைநிற்குமே”

என்பனவற்றா னுணர்க.

திருச்செந்தூர்ப்பரணி, துறைசைக்கலம்பகம் இவை சீனிப்புலவர் பாடியன. பொன்பற்றிச்செல்லியம்மையூசல் சருக்கரை அருணாசலப் புலவரியற்றியது. இவர் ஓர்சமயத்திற் றேரடிக் கறுப்பணசாமியைப் பாடிய பாடல்,

“திக்கனைத்துமெச்சுமட்டவக்கரத்தையுச்சரித்த
சிட்டருக்கநுக்ரகத்தையே
வைக்குமற்புதப்ரசித்தர்மற்பிடித்தமர்க்களத்தின்
மத்தகத்தினைத்தகர்த்தகோ
மெய்க்கொள்தத்துவத்தையத்தைபுத்திரற்குரைத்தாக்கர்
மெய்ப்புயத்தினைத்துணித்தநீள்
சக்கரக்கரத்தர்பத்தர்சத்தமிட்டிடித்தெழுப்பு
சப்பரத்தடிக்கறுப்பரே.”

என்பது. இத்தமிழ்நாட்டிற் கறுப்பணசாமிகோவிலில்லாதபழைய வூர்கள் இல்லையென்றே சொல்லலாம். இச்சாமிவழிபாடு இங்ஙனந் தொன்றுதொட்டு மிக்குள்ளதன்காரணம் இச்சாமியை, உலகெலாங்காக்கும் ஒருபெருங்கடவுளின் ஏவலால் ஊர், ஆலயம், தேர் முதலியவற்றைக் காவல்புரிய நியமிக்கப்பெற்ற பூதகணத்தவராகக் கருதப்பட்டதே யென்று இப்பாடலான் உய்த்துணரலாகும்,

வைரவக்கடவுள்பதிகம் சருக்கரை முத்துக்கருப்பப்புலவரியற்றியது. இப்புலவர்வழியினர் இக்காலத்தும் இச்சேதுபதியளிக்கும் வருஷாசனம்பெற்றுத் தழைக்கின்றாராவர். இவரொப்ப வருஷாசனம் பெற்றுவரும் புலவர்வழியினர்பலர் ஊருணிக்கோட்டை கமுதைமுதலிய பல இடங்களி லுள்ளனர். ஊருணிக்கோட்டையிலுள்ளவர் மாசிலாமணிப்புலவர்வழியினர். கமுதையிலுள்ளவர் குமாரப்புலவர்வழியினர்.

இனி, அழகியசிற்றம்பலக்கவிராயர் தளசிங்கமாலைபாடியவர். இந்நூல் சேதுபதியைப்புகழ்ந்தது. இதன்கண் இவர் சேதுபதியை, “கல்வி

சேர்விற்பன்னன்" "அடுத்தார்க்கு எந்தநாளும்வளர்ந்தசெல்வந்தருவா" னென்றும், இராமேசநுக்கு முன்மண்டபஞ் செய்தானென்றும், "திருப்புல்லாணிக்கோபுரங் கட்டுவித்த தனத" னென்றும், சேதுவிற் சோடசதானஞ்செய் புண்யகுணசாந்தனென்றும், "காவி லெட்டன்றலையையணிந்தவ"னென்றும், வேதியர்க் கென்றுஞ் செய்யுந்தடக்கை யுடையவனென்றும், புன்மைசெய்தார்க்கும் நன்மைசெய்து புரக்குந்தன்மையனென்றும், "கரனேயினீசரபதம்போற்றி யேத்தினவன்"என்றும், "மதுரையுங்காத்துவளருந்தெய்வத் தனுக்கோடிகாத்தவ" னென்றும் கூறுநின்றார். இவற்றால் இச்சேதுபதிவரலா றொருவாறுணரலாகும். இவர் இவரைப் பாடிப் பெற்ற பரிசில் மிதிலைப்பட்டி என்ற விளைபுலவூர். இப்புலவர்வழியினர் இன்றைக்கும் இவ்வூரை முற்றூட்டாக அனுபவிக்கின்றனர். இவரும் இவர்வழியினரும், சேதுபதிபுரிந்தருளிய நன்றிபாராட்டி நாளும் தாம்தாம் உணவருந்துமுன்னே சேதுபதிக்கு ஒருவாழ்த்துக்கவிபாடுவது வழக்கம். இவர்வழியில் மங்கைபாகக்கவிராயர் கோடுங்குன்றப்புராணம் பாடினர்.

அமுதகவிராயர் ரகுநாதசேதுபதிமேல் ஒருதுறைக்கோவை பாடினர். இந்நூல் தமிழ்மக்களாற் பெரிதும் பாராட்டப்படுவதொன்று. இதன்கண் இவர் இரகுநாதசேதுபதியைத் "தளவாய்குமாரன்"எனவும், "இயலைத்தலைபெற்ற முத்தமிழ்வாணர்க்கெழுமடங்கு, புயலைப்பொருவு கையான்"எனவும், "மகக்கண்ணிற் சில மறையோரை வாழ்வித்து வான்கொணர்ந்து, சுகக்கண்ணிற் சேர்த்தவன்" எனவும், "மனுக்கலைநூறெரிந்த வெங்கோன்" எனவும், "முறையாலணிநாவசைந்து கறங்காமணிமுன்றிலான்" எனவும், "செங்காவியங்குடையான்" எனவும் "கலைவாணர்சங்கத்தமிழ்க்குருகிச் சித்தங்களிப்பவ" னெனவும், "புகலூர்ஞானாகரன்" எனவும், "ஆரியர்போற்று மிராமீசர்தாளிணைக் கன்புவைத்த சூரியன்" எனவும், "பாவுக்கிசையும்பெயரேபுனைந்து மெய்ப்பாவலர்த நாவுக்கிசையும் பெரும்புகழான்" எனவும், ஒருகாலத்தும் பொய்யுரையான் எனவும், "நடைகற்றவன்றே கொடுப்பதுங்கற்றவன்" எனவும், "கலைக்கேநெடுங்கடலன்ன னடைக்கலங்காத்தவன்" எனவும், "காக்குங்கருணையுங் கல்வியும் வாழ்வும் கவிமதுர, வாக்குந்தழைத்தவன்" எனவும், "புன்னுந்தமிழ்ப்பயிர் வாடாது மாரியிற் பாரின்முத்

தும் பொன்னுஞ்சொரியும் ரகுநாதன்" எனவும், (நம் சேதுபதிமஹா ராஜரைப்போல) "செந்தமிழுங் கீதக்கலேயும் வல்லான்"எனவும், "சொற் பாவலர்தங் கிளைவாழச் செம்பொன்சொரியும் வண்மைய" னெனவும், "நாகமுந் நூதமிழேரின்மைக்கங்குளையச்செய் திவாகர" னெனவும், "நாலாம்பணுவ னவரசச்சொற் றமிழ்நாவலர்க்கு மேலாம்பரிசருண்மால்" எனவும், "குஞ்சத்தை வெள்ளைக்குடையைத் தமிழ்க்குக் குலவு சப்ர மஞ்சத்தையீயுங் கொடைரகுநாதன்" எனவும், "பம்பு வியாகரணங் கலை ஞானங் கொள் பண்டிதரா, னம்பும்வியாழன் ரகுநாதன்" எனவும், "கோ வைத்துறைக்குப் பதினுயிரம்பொன் கொடுத்திசைகொள், தேவைத் துறைக்குத்துரை" யெனவும் கூறினர். இவற்றால் இச்சேதுபதியுடைய அறிவும், நீதியும், புலவர்க்கீயும் பெருவண்மையும், தமிழபிமானமும், நம் மஹாராஜாவர்களைப்போலக் கவிமதுரவாக்குடைமையும் நன்குணர லாகும். இவர் வண்ணம் பாடுதலினும் வல்லவரென்பது, குறித்த நாழிகையில் ஒரு வண்ணப்பாட்டை இவரும் அனந்தகவிராயருமாக ஒட்டம்வைத்துப் பாடநேர்ந்தபோது, இவர், அவ்வண்ணத்தை அனந்த கவிராயரின் முற்படப் பாடிமுடித்தாரகப் பேசிய ஒட்டப்படி அனந்த கவி காதில் தோட்டியை இழுக்கப்புக, அப்போது அனந்தகவிராயர் சாதுரியமாக 'அனந்தனுக்குக் காதில்லையென்பது தெரியாதாய்' என்று இவரை நோக்கிக் கூறினர் என்று கர்ணபரம்பரையாக வழங்குதலான் அறியலாம்.

ஆசிரியநிகண்டுடையான் மேற்கோள்நூலாகக் காட்டப்பட்டதும் கவித்துறையிலமைந்ததுமாகிய *கயாகரநிகண்டு என்னும் நூல் சேது பதிகளுடைய இராமீச்சரமாகிய தேவைநகரத்து வேதியரும் பெரும் புலவருமாகிய கயாகரரால் இயற்றப்பட்டதென்பது, அந்நூலோவ் வொரு தொகுதி யிறுதிச்செய்யுளா லுணரப்படுவது. இத் தேவைக் கயாகரர் இராமீசர்கோவையும் பாடியவரென்பதும் உணர்ந்துகொள்க.

"ஓங்கிடப, கேதனன்பற்றுமறவாததேவைக்கெயாகரன்றுரல், வேதியன்" எனவும்,

"காசிபகோத்திரம்வாழவந்தோன்றெண்கலைத்தமிழ்தேர்
மாசில்பெருந்தகைமாருவதிபன்மலரயனும்
கேசவனும்புகழ்தேவைநன்னுடன்கெயாகரன்" எனவும்,

---

*இக்கயாகரநிகண்டு இத்தமிழ்ச்சங்கத்துக் கென்னுற் றரப்பட்டுள்ளது.

"இராமீசுரக்கோவைசொற்றகுருபான்"

எனவும், அந்நூற்றெகுதியிறுதிகளில்வருதலா னறிக.

பலபட்டடைச்சொக்கநாதப்புலவர் இச்சேதுநாட்டுத்தேவையுலாப் பாடியவர். இவ்வினியநூல் உலகம்புகழும் பெருந்தமிழாசிரியராய் இந் நல்லவையை அலங்கரித்துவிளங்கும் நம் மஹாமஹோபாத்யாய ஐப ரவர்களால் அச்சிடப்பட்டுள்ளது. மற்றும் இவரியற்றியது இச்சேது வேந்தர்க்கு மதிமந்திரியாயிருந்த தெய்வகன்னியென்பார்பேரில் விஞ் சைக்கோவை என்பது ஒன்றுண்டு. இதனை,

"கொல்லாதமானென்றுமீசன்கைம்மாணிக்குவலயத்தில்
வெல்லாதயானைவெள்ளானையொன்றேமெய்ப்புனமகலார்
இல்லாதவீரமிவாதன்றேவினியாதவன்சொல்
கல்லாதமுத்துரகுநாதன்விஞ்சையிற்காவலரே"

"எத்திக்கும்போற்றும்ரகுநாதன்விஞ்சைக்கிருநிதியாய்
வர்த்திக்குமந்திரிமால்தெய்வகன்னிவரையிடத்தே
முத்திக்கையாற்றெருட்டுக்கட்டிக்கொண்டாளம்மொழிக்குமொழி
தித்திக்குநெஞ்சுக்குநாவுக்குங்கண்ணுக்குந்தித்திக்குமே"

என்னுங் கவிகளா லுணர்க. விஞ்சையென்பது நேட்டூர். இவர் இக் கோவையரங்கேற்றிய எட்டாநாளில், தெய்வகன்னி இறந்தாராதலான், சுப்ரதீபக்கவிராயர் தெய்வகன்னிபாலுள்ள அன்பால் இக்கோவையின் ஆனந்தங் காரணமாக இறந்தாரென்றுகொண்டு புலபட்டடைச்சொக்க நாதரை வெறுத்து,

"தேவைரகுநாதன்மெச்சுந்தெய்வகன்னிமீதினிலே
கோவையென்றுபில்லிவைத்துக்கொன்றாயே—பாவியுன்றன்
இட்டடைச்சொல்லார்பொறுப்பாரேண்டாமடையபுல
பட்டடைச்சொக்காமுழுவம்பா"

என்று பாடினாரென்பர். இத்தெய்வகன்னிமந்திரியே இச்சேதுபதி யரசர்குலநிதியாய்ப்போற்றும் சிராசராசேச்வரியின் பலிபீடத்தை ராய வேலூரினின்றுகொணர்ந்தவரென்பது,

"கலியாணசோமனல்லேலனவாருகர்த்தாக்கள்மெச்சுஞ்
சலியாமதிமந்த்ரிமால்தெய்வகன்னிதன்றந்திரத்தால்
நலியாதுராயவேலூர்புகுந்தேயன்றிராத்திரியே
பலிபீடங்கொண்டுவந்தான்சேதுவாசல்பலக்கவென்றே"

என்னும் பழையபாடலா னறியப்படுவது. இராமேசருக்குப் பொற்குத்துவிளக்கிட்டவரும், இராமேசர்தேவையிற் சோமவாரமடங்கட்டி அதற்கு நம்புதழை என்னும் ஊரை யளித்தவரும் இத் தெய்வகன்னி மந்திரியாரே. இவ்வாறே இச்சேதுநாட்டரசர் மந்திரியைப்பற்றிய தமிழ்ப்பாடல்கள் எண்ணிறந்தன வுள்ளன.

"வாசமலர்மடந்தைபோல்வார்வண்கானப்பே
ரீசன்றன்மக்களெழுபதின்மர்—தேசத்
திரவலர்மேனீட்டுவர்கையீண்டுலகங்காக்கும்
புரவலர்மேனீட்டுவர்பொற்கால்"

கணிகையரும்பொய்யாமொழியார்க்குஎழுபதினாயிரம்பொன்னளித்துத் தமிழ்ப்பாடல்பெற்றசிறப்புடைய சேதுநாட்டுத் திருக்கானப்போர்த் தலத்தையும் விஞ்சையென்னும் கெட்டோர்த்தலத்தையும் திருப்பணி செய்தவன் சேதுநாட்டுச் சேதிராயனென்னும் மந்திரியென்பதும், பாண்டியநாட்டைச் சோழர் வென்றுகொண்டபோது பாண்டியன் நாடு வேண்டிவர அவனைத் தன்னகத்துச் சிறக்கவைத்துத் தாங்கினன் இச்சேதுநாட்டுக் கொடுமூரிலிருந்த பெரிய பிரபுவாகிய வேணுடன் என்பதும், அவனே இச்சேதுநாட்டுச் சாளக்கிராமங்கண்டவன் என்பதும் பின்வரும் பழையபாடல்களா னறிந்துகொள்க.

"தருக்கொளும்விண்பொழில்சூழ்திருக்கானையெனுமூலத்தலத்தைக்கண்டு
வெருக்கொளும்வெம்புலிக்காடானவையெல்லாம்வேரறவேவெட்டிச்செய்ய
தெருக்களுமாடமுங்கூடகோபுரமுந்தூபிதிருமதிளுஞ்செய்து
திருக்குளமுங்கரைகண்டான்மந்திரியாந்திருஞானச்சேதிராயன்"

"நட்டேரிற்சோமேசர்கோவிறலமானதனைநகத்தாற்செய்து
மட்டேருங்குழலுமையாளுலகுடையநாயகியைவகுத்தங்கேற்றிக்
கட்டேரன்கிளைவாழச்சேதுபதிரகுநாதன்கருணைவாழ
நெட்டேருங்காணியுங்கொண்டாணடுகொண்டானிறைஞானச்சேதிராயன்"

இப்பாட்டாற் சேதுபதிமந்திரி சேதிராயனுதல் தெரிக.

பாண்டியன் தென்கொடுமூர் வேணுடனைப் பாடியது:—

"சென்றுமகாமேருவின்மேற்சேலேற்றியேபுடைத்தே
யன்றிருந்தேஞ்சங்கத்தவரோடு—நன்று
விருந்தோம்புந்தென்கொடுமூர்வேணுடன்கூட
விருந்தோம்படிவேண்டியின்று" என்பது.

இதன்கட் கூறப்பட்ட வேணாடன் கூத்தரால் விக்கிரமசோழனுலாவில், "வெம்பிக், கலக்கிய வஞ்சக் கலியதனைப் பாரில், விலக்கிய வேணாடர் வேந்தும்" என்று புகழப்பட்டவனாவான். இச்சேதுநாட்டு இவனைச் சிறப்பித்துரைக்குங் கதைகள் பல வழங்குகின்றன. இவன் வரையாது சோறிட்டுப் புகழ்பெற்றவன். இதனை "நன்று விருந்தோம்பும்" என்னும் விசேடத்தானும், "கலியதனைப் பாரில் விலக்கிய" என்னும் விசேடத்தானும் உணரலாம். இவனே இந்நாட்டுச் சாலைக்கிராமங்கண்டவனென்பது,

"மாறுகொண்டமன்னவரைவடவரையிலேற்றி
வல்லாரைத்திறைகொணர்ந்தவரகுணவீச்சுரனுக்
காறிரண்டுபன்னிரண்டினடியளந்தகோலா
லகமகிழ்ந்தேதென்னன்குகிழமேலெட்டுக்
கூறுகொண்டமடைகுழிமுப்பத்திரண்டு
குறுந்தெருவும்பெருந்தெருவுங்குறித்துநாட்டிச்
சேறுகொண்டவயற்சாலைக்கிராமங்கண்டான்
றென்கொடுமூர்வேணாடர்செல்வன்றானே"

என்பதனாலறிக.

வெண்பாப்புலிக்கவிராயர்:—இவர் சேதுநாட்டுச் செவ்வூரினர். இவர் வசைபாடுதலில் வல்லவரென்பது,

"கந்தனேநீயாறுற்கற்றவனோநாறை
விந்தவருடம்போயெதிராண்டில்—வந்தவினை
தீராவினையாய்த்திரும்பாவியாதியாய்
வீராசாமிக்கேவிதி"

என்னும் வெண்பாவாலறியப்படுவது. இவர் நண்டுக்கறிவேட்கைமிக்க கருத்தான் என்பான் புலாலுண்டலையொழித்ததாகக் கூறியதுகேட்டுப் பாடியது,

"வண்டுவந்தாற்றெரியும்மலர்வாசம்வழிநடத்திக்
கொண்டுவந்தாற்றெரியும்பரிவேகங்குணத்துடனே
கண்டுவந்தாற்றெரியும்பிறர்வாஞ்சைகறிக்குதவு
நண்டுவந்தாற்றெரியுங்கருத்தானுடைநாயமே"

என்பது.

மதுரகவி:—இவர் இசைப்பதங்கள்பாடுதலில் அதிகம் வல்லவர். இவர் இச்சேதுநாட்டு மதிமந்திரி முத்திருளப்பபிள்ளையவர்களையும், சிவ

கங்கையாண்டமருதுபாண்டியனையும் மிகவும் அரியபெரிய இசைப்பதங்களாற் புகழ்ந்துளர். இவர் இச்சேதுநாடாண்ட மங்களேச்வரிராணியாரைப் பாடிக் காக்கைகுளம் என்ற விளைபுலவூரைப் பரிசிலாகப்பெற்றவர். "அன்னமங்களேச்வரியென்னைக் கடைக்கண்ணாலேபார்த்தாள் காக்கைகுளமறப்பத்துநாற்கலமுநிருபத்துடனேதாரைவார்த்தாள்" என்றிசைப்பதத்துவருதலானிதுணரலாம். இக் காக்கைகுளம் இவர்க்குக் கிடைத்தகாலையி லிவர்கிடர் பல வியற்றியவன் அக் காக்கைகுளத்து உடையான் என்பான். அவ்வுடையானைத் தொலைத்து மதுரகவியைக் காத்தவன் வீரசோழனிலிருந்த ஆறுயிரம் என்பான். இவ்வாறுயிரத்தின் நன்றிபாராட்டி இம்மதுரகவிபாடியவெண்பா,

"காக்கைகுளமாங்கடிமலர்ப்பூம்பொய்கையந்த
ஊர்க்குட்காரவாமுடையானே—நீர்க்குவந்த
வாரணமேநல்லமதுரகவிநேமிதொட்ட
ஆரணனே ஆறுயிரம்"

என்பது. இவர் மதுரைமீனாக்ஷியைப் பாடிய "எப்படியாட்கொள்வாயே" என்னும்முதலையுடைய பாட்டு எவருள்ளத்தையும் உருக்கும். இச்சேதுநாட்டுப் பெருங்கரையில் இசைப்பதம்பாடுதலிற் சிறந்தவராயிருந்த கவி குஞ்சரமையரும் இவர்பாற் பயின்றவராவர். இவர் அழகர்குறவஞ்சி பாடிச் சிவகங்கையரசர்பால் அரங்கேற்றிக் கோட்டாங்காய்ச்சியேந்தல் என்னும் ஊரைப் பரிசிலாகப்பெற்றார். இவர்பாடியது கந்தபுராணக் கீர்த்தனை.

தலைமலைகண்டதேவர்:—இவரூர் காடடர்ந்தகுடியென்பது; சேதுநாட்டு நயினார்கோவிலெனப் பெயரிய மருதூரையடுத்துளது. இவர் பாடிய மருதூரந்தாதி கற்றார்பலரும் அறிந்ததே. இவர் சேதுவேந்தர்குலத்தவர். இவர் பிறவிக்குருடர். இவர் நாகநாதக்கடவுளருளால் ஊனக் கண்ணும் ஞானக்கண்ணும்பெற்று வரகவியாய் விளங்கினரென்பது மருதூர்ப்புராணத்தால் அறியப்படுவது.

சிற்றம்பலவையா:—இவர் மருதூர்ப்புராணம் பாடியவர். இவர் சேதுநாட்டுச் சிறுகம்பையூர்ச் சுப்பிரமணியபிள்ளை புதல்வர். வாணியருள்பெற்றவரென்றும் ஞானவாக்கியென்றும் சிறப்பிக்கப்பெற்றவர். இவர்பாடிய மருதூர்ப்புராணம் இரகுநாதசேதுபதி நல்லவைக்கண் அரங்

கேற்றப்பட்டது. இந்நூலரங்கேறியகாலத்தில் இரகுநாதசேதுபதியார் 'செவ்வந்திலிங்கமுனிவர்' என்ற ஓர் துறவியைக்கொண்டு நாகேசர் சந்நிதியிற் சிறந்த திருப்பணிகள் நடாத்தினர். திருக்கோயிற்காரியத் தலைமையைத் துறவிகள்பாலும் அன்னசத்திர காரியத்தலைமையை அந்தணர்பாலும் நல்கி யறத்தாரேம்பல் பண்டையரசர்வழக்கமென் றுணர்க. இவற்றை,

"நம்பரருள்விளங்குமருதூர்ப்புராணம்பகர்ந்தோன்ஞானவாக்கி
கம்பைநகர்க்காராளர்மரபினிற்சுப்பிரமணியன்கருணைமைந்தன்
செம்பொருளுவலர்மகிழ்சிந்தாமணிசிற்றம்பலவன்றெண்ணீர்வேலி
யம்புவியில்வெண்கமலையருட்பனுவல்பெற்றதமிழரசுதானே"

"பரமர்திருநாகேசர்சந்நிதியிற்சிறந்ததிருப்பணிநடாத்திச்
சரமசரந்தொழுங்கடவுட்செவ்வந்திலிங்கமுனிதழைக்குங்காலம்
புரவரனையருருச்சனைசெய்நம்பிமார்பதநம்பிப்புராணம்பாடி
யிரவிகுலச்சேதுபதிரகுநாதன்சபையிலரங்கேற்றினனே."

என மருதூர்ப்புராணத்துப் பாயிரத்துள் வருதலா னுணர்க.

இம்மருதூரிற்போலவே சேதுபதிகள் ஊர்களையும், பொருள்களையும், காரியத்தலைவரையும் இராமநாதபண்டாரம் என்னும் முனிவனிடம் நல்கித் தேவை யிராமீச்சரத்திருக்கோயிலைத் திருப்பணிகளாலும், நித்திய நைமித்திக பூசை விழாக்களாலும், திருவாபரணங்களாலும், வாகனாதிகளாலும் அனைத்துநலந் தங் கொண்டாடச்செய்தனரென்பதைப்பின் வருவனவற்றா லுணர்க.

சென்னைச் சிலாசாசனபரிசோதனை No. 12 (1910—1911.)

"சகாப்தம் ௧௬௦௩ ஜெயதுங்கராய வங்கிசாதிபரான துகவூர்க் கூற்றத்தில் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர்க் கீழ்பால் விரையாதகண்டனி லிருக்கும் ராஜஸ்ரீ தளவாய் சேதுபதிகாத்ததேவரவர்கள் ராமநாதசுவாமி பர்வதவர்த்தனியம்மன் உடையவர் கட்டளைப்பூசைக்கு இராமநாதபண்டாரமவர்கள் பாரிசம் சேது தனுக்கோடியில் ஆப்பனூர் நாட்டிற் கருக்குளம், கள்ளிகுளம், கரிசைக்குளம், வேலங்குளம், பொட்டற்குளம், வெட்டந்தை, கண்ணன்பொதுவன், முத்தான்சிறுகுளம் ஆக எட்டு ஏந்தல்களும்"

தானஞ்செய்யப்பட்டன என்றுள்ளது.

## No. 101 (1903ஷு)

"சகாப்தம் ௲௬௱௬௰௫-ன் மேற்செல்லாநின்ற ருதிரோத்காரி-ஷு மாசி௴ ௨௰௯௳ புதவாரமும் சத்தமியும் உத்திரமும் பெற்றநாளில் உடையநாயனை சேதுபதிகாத்ததேவர்புத்திரன் கூத்தனை சேதுபதிகாத்ததேவர் உபயமாக ராமநாதசுவாமி முதற்பிரகாரம் திருநடமாளிகைப்பத்தி, ஆருடமண்டபமும் கட்டிமுகிப்பித்தான்.

## No. 99 (1903ஷு)

"சேல்கண்டவாரியிலங்கேசன்வெம்பழிதீரமுன்னாள்
மால்கண்டகோயிலிராமீசராடல்செய்மண்டபத்தை
நூல்கண்டநற்சகனாயிரத்தோடைந்துநூற்றிருபான்
மேல்கண்டநாளின்முனிராமநாதன்விதித்தனனே"

"திருமாலராணுக்கபிடேகஞ்செய்யச்சிலையதனால்
வருமாறுகண்டவண்கோடிப்புனற்கண்மகாலயத்தைத்
தருமாயிரத்தைந்துநூற்றுமுப்பான்செல்சகவருடத்
தருமாதவஞ்செய்முனிராமநாதனமைத்தனனே"

## No. 102 (1903ஷு)

"பற்றுஞ்சகனிற்பதினைந்துநூற்றிருபான்மருவ
நற்றும்புவியினையாள்வீரபூபதிநாளிற்றொண்டர்
குற்றங்கடிந்தவர்சிராமநாயகர்கோயிலன்பான்
முற்றுந்தவங்கள்புரிராமநாதன்முடித்தனனே"

என வருவனகொண்டு தெளிக.

முத்துக்குட்டிப்புலவர்:— இவரூர் சாலைக்கிராமத்தையடுத்துள்ள பரத்தைவயல் என்பது. இவர் வாக்குப்பலிதமுள்ள கவியென்று கொண்டாடப்பெற்றவர். இவர் திருக்கோட்டியூர்த் தலத்திற்கு நடுராத்திரியிற்சென்று தோசியினின்று பசித்துப்பாட, அவ்வூரிற் கோயில் கொண்டருளிய ஸௌமியமூர்த்திக்கடவுள் ஓரந்தணனாகத்தோன்றி அக்காரவடிசிலைத் தோசிப்பலகையின்கண் வைத்துச்செல்ல, இவர் அதனை எடுத்தருந்திப் பாடிய பாடல்,

"ஊருண்டுறங்கியொருசாமமாயிற்றிவ்வூர்தனிலே
நீரும்பருக்கையுமார்தருவாரிந்தநேரமென்றேன்
மூரன்மலர்மங்கைமார்பாசவுமியமூர்த்தியுன்றன்
றேருந்தருங்கட்டிச்சோறுங்கடற்கரைச்சீனியுமே"

என்பது. இவர் சேதுபதிமந்திரி தாண்டவராயபிள்ளையின் தம்பி நல்ல தம்பிப்பிள்ளையென்பான் நாட்டரசன்கோட்டையிலே அலைகொலைசெய்து கொடியனுயுள்ளநாளில் அவனைப் பிள்ளைத்தமிழாற்பாடிப் பரிசில் பெறலா மெனப் பிறர்கூற, அவன்கொடுமையால் அவனை வெறுத்து, "அவற் கியாம் பிள்ளைத்தமிழ்கூறேம், கொள்ளைத்தமிழ்கூறுவேம்" என்று,

"பட்டவிளக்குமாற்றினுக்கோர்பட்டுக்கயிறுதரித்தாற்போல்
இட்டப்பெயரோநல்லதம்பியென்றேநினக்கிட்டிசைத்தவரார்
எட்டிப்பழமேபழஞ்செருப்பேயெள்ளத்தனையுநாணமிலா
மட்டிப்பயலேநல்லதம்பிமடவோய்சாகாய்வாழ்வாயோ"

எனப் பாடிய மறுநாளே யவ னிறந்தானென்று எழுதிய தோடுகொண்டு தோட்டிவர, அப்போது,—

"நல்லதம்பியென்றொருவனுட்டரசன்கோட்டையிலே
அல்லனென்றுபோனனென்றுள்வந்தானம்மானை
அல்லனென்றுபோனனென்றுள்வந்தானுமாயிற்
சொல்லவந்ததூதுவனுந்தோட்டிகாணம்மானை
தோட்டியலன்கூடநின்றுசுட்டவன்காணம்மானை"

எனப் பாடினரென்ப இவர் தந்தைபெயர் தாண்டவராயசாமி யென்ப தும், இவர் தாயாரின்பெயர் முத்துத்தாய் என்பதும், இவர் பெற்றூர் பால் அன்புபேணி பொழுகியவர் என்பதும் இவர்பாடிய,

"தருமணியாந்தாண்டவராயசாமியென்றந்தையவன்
திருமனையாண்முத்துத்தாயுலகேத்துஞ்செயலக்குமி
யிருவருமீன்றதமிழ்முத்துக்குட்டியென்பேணிவர்தம்
பெருமையைநீடூழிகாலமும்வாழ்த்திப்பெருகுவனே."

என்னுங் கவித்துறையாற் றெரியலாம்.

சிற்றம்பலதேசிகர்:—இவரூர் திருமறைக்காடாயினும் இச்சேது நாட்டுச்சிவஸ்தலமாகிய திருவாடானையென்னுந்திருப்பதிமான்மியந் தமி ழாற்பாடிப் பலவரிசைகளுநம் வருஷாசனமும் சேதுவேந்தரால் அளிக்கப் பெற்றூராவர்.

பெருங்கருணைமுத்தழகர்:—இவர் பெரிய அவதானி. அஷ்டாவ தானம் ஆயிரம் அக்ஷரத்தை எங்ஙனமாற்றினும் முறைபெய்துரைக்க வல்லவர். அன்னியபாஷைகளையுங் கேட்டவண்ணமே திரும்பச்சொல்

லும் ஞாபகசக்தி வாய்ந்தவர். இவர்பாடியது திருக்கோட்டியூர்க்கலம்பகம்.

மாம்பழக்கவிராயர்:—இவர் கவிச்சிங்கநாவலர் என்று பட்டம் பெற்றது சேதுபதிவேந்தர்பாலே. இவர் சேதுபதிவண்ண மென்றொன்று பாடினர். பிறரா லாச்சரியப்படத்தக்க ஞாபகசக்திவாய்ந்தவர். இவர் ஒருபுலவன்பாடிய நூறுபாட்டையும் தாம் பாடிய பழம்பாட்டென்று தாம் ஒருதரங்கேட்டதுகொண்டே சொல்லிக்காட்டியது இந்நாடறிந்தது. இவர்காலத்தே கல்போதுப் பிச்சுவையர் என்னும் வித்துவான் எளிதிற் பொருளறியலாகாதபடி யாத்த திருவாடானையந்தாதி என்ற நூலைக்கொண்டு சேதுபதிபாலெய்த அதனைக்கேட்டு,

"உச்சிதமாமுன்னோருரைத்ததமிழையெல்லா
மச்சரங்களச்சரங்களாகவே—நிச்சயமாப்
பிச்சுவைப்பதாலேநின்பேர்பிச்சுவையனென
வைச்சனன்கல்போதுமன்"

என்று பாடினராம். கல்போதுப் பிச்சுவையர்பாடிய திருவாடானையந்தாதியில் ஒருபாட்டு:—

"முன்னவனைப்பாம்பிரவிகொடேரகிற்புகுவனெனமொழியும்வேதம்
அன்னவனைச்சிறுகாலோதிமம்பழனம்பவன்கயிலைபடைவானென்றும்
கன்னனெடுங்கமுகினஞ்சூழ்பொழில்பெருகுமாடானைக்கருத்தன்பேரை
யிந்நிலத்திற்கீர்த்திநெல்விதரித்திடுமோவென்றுமடியேற்குத்தானே"

பாம்பிரவி-பணியாதவன். சிறுகாலோதிமம்பழனம்பவன் - வந்தனஞ்செய்பவன். கீர்த்திநெல்விதரித்திடுமோ-புகழாம லகந் தரித்திடுமோ (எ-று). இந்நூ லரங்கேறியது சேதுவேந்தரவைக்களத்தேதான்.

சோமசுந்தரகுரு:—இவர் இவ்விராமநாதபுரத்து நெல்லையப்பரென்பவர்புத்திரர். இவருடன்பிறந்தார் வேதாந்தசூடாமணியுரைக்குப் பாயிரஞ்செய்த சாமிநாதன் என்பார். இதனை "வடிதமிழ்க்கும்பன் சுவாமிநாதன்றுணைவன் வளர்நெல்லையப்பன்மைந்தன், வளர்பெருங் குணஞான சோமசுந்தரகுருபதாம்புயம்புரவுதாகன்" எனச் சரவணப்

பெருமாட்கவிராயர்பாடுதலா னறிக. *ஆதியில் இச்சேதுவேந்தராற்
பல ஊர்களை அளிக்கப்பெற்றகாரணத்தால் அந்நன்றிபாராட்டிச்
சேதுபதியன்னமும், காவிரிநீரும் ஆவுடையப்பநீழலும் யாம் என்று
முடையோம் என்று ஆதீனகர்த்தர்கள் நாளும்புகழுஞ் சிறப்
புடையதும், செந்தமிழ்ப்பயிரைச் சீர்பெறவளர்த்ததும், சைவசித்தாந்த
சாஸ்த்ரங்கட்கெல்லாம் விளைநிலமாயதும், இன்றைக்கும் என்றைக்கும்
புலவர்க்கெல்லாந் தாயகம்போன்றதுமான திருவாவடுதுறையாதீனத்து
வடகலை தென்கலைக் கட னிலைகண்ட ஆசிரியர் சிவஞானமுனிவர்பாற்
கல்விகற்ற பெருஞ்சிறப்புடையாரவர். இச்சோமசுந்தரகுருமாணாக்கர்
அட்டாவதானி பெரியசரவணக்கவிராயர். இராமநாதபுரம் இயற்றமி
ழாசிரியர் என்று பெயர்சிறந்து நன்னூற்குக் காண்டிகையுரையும், ஆத்தி
சூடியுரையும், கொன்றைவேந்தனுரையும் இயற்றியவரும், தமிழ்க்
கல்வியானிரம்பிய சரவணப்பெருமாளையர் விசாகப்பெருமாளைய ரிவர்கட்
குத் தமிழாசிரியருமான இராமாநுஜகவிராயர் இவர்மாணாக்கராவர்.
இவர் சேதுபதியா லன்புபாராட்டப்பட்டவ ரென்பதுமுதலியவற்றை,
"துங்கமிகு சேதுபதி மகிழுநேசன் சோம சுந்தரச் சுவாமி தாசன்,
சோடசவதானகவி சரவணப்பெருமாட் சுயம்ப்ரகாசன்கையோலை" எனச்
சரவணக்கவிராய ரோலைத்தூக்கின் வருதலா னறிக. நன்னூல் இராமா
நுஜகாண்டிகைக்கண், "தவக்கொழுந் தென்னமா தவத்தினர் துதித்
து றாஉஞ், சிவஞானதேசிகன் சேவடிக் கன்புபூண், டவனூ லுணர்த்திய
வைந்திய லோர்ந்தனன், சோமசுந்தரனெனுந் தொன்னூற் குரவன்"
எனவும், 'தகைகெழு சோமசுந்தரகுரு வருளைக், கென்னுளெனுமகத்

---

*ஆதியில் இச்சேதுவேந்தராற் பலவூர்களை அளிக்கப்பெற்ற காரணத்தால் என்று சுட்டியவற்றுள் இதன்பின்வருவதும் ஒன்றெனக்கொள்க.

சேதுநாடு மழையின்றிமெலிந்தபோது திருவாவடுதுறையாதீனகர்த்தர் மேக ராகக்குறிஞ்சிப் பண்முறைத் தேவாரம்பாடிட மழைபெய்ததற் குவந்து சேது வேந்தர் விரிசிலையாற்றங்கரையிலுள்ள **போற்கோட்டை** என்னு மூரை முற்றூட்டாக மடத்திற்குநல்க அந்நன்றிக்கு ஆதீனகர்த்தர் பாடியருளிய வெண்பா:-

"நதியாம்விரிசிலைநன்னகர்பொற்கோட்டைப்
பதியாந்துறைசைப்பதிக்கு—விதியாகத்
தானமிட்டான்சேதுபதிதாரணிதானுள்ளமட்டு
மூனமில்லையென்றெந்நாளும்." என்பதாம்.

தினைப்பலியீந்து' எனவும் வருதலானும் இவை யுணரப்படும். இச் சோமசுந்தரகுரு இயற்றியது திருக்கழுக்குன்றக்கோவை.

இராமாநுசகவிராயர் இவ்விராமநாதபுரத்தரென்பது, அஷ்டாவ தானம் வீராசாமிக்கவிராயர் "முகவைவருசெல்வனெங்கோன் முறைத் தமிழாசிரியனிராமாநுசன்னுமுன்னுகவிராயன்" எனப் பாடுதலா னறிய லாம். இவர் தமிழில் மொழிபெயர்த்த ஆத்மபோதம் என்ற நூன் முடிவில்,—

"முத்தமிழ்க்கடற்சொன்முழுவதுஉங்கடந்து
சுத்ததத்துவமெலாந்தரீஇமெய்யுணர்ந்த
சோமசுந்தரனெனுந்தொல்லாசிரியன்
நாமமந்திரமெனநவில்மாணக்கன்
தரங்கநீர்முகவையந்தண்பதியதனுள்
இரங்கையன்மாதவத்தெய்தியதோன்றல்
இயற்றமிழாசிரியனிராமாநுசகவிராயன்"

என வருதலான் இவரூர் முகவை (இராமநாதபுரம்) என்பதும் இவர் இரங்கையர் புதல்வரென்பதும், வடநூற்பயிற்சியும் சாஸ்திரவுணர்ச்சி யும் உடையரிவரென்பதும் அறியப்படும். இவரே அக்காலத்து முற் படத் தமிழ்நூல்களை அச்சிடத்தொடங்கியவர். தமிழிற் சிறந்த திரு வள்ளுவர் திருக்குறளைப் பரிமேலழகருரையுடனும் அதற்குத் தெளி பொருள் விளக்கத்துடனும் அச்சிடத்தொடங்கின ரிவரே. இவரே டுரு, தாம்ஸன்கிளார்க்கு, ரானஸ், போப், வின்ஸிலோ முதலிய பெரிய ஆங்கிலேயர்கட்குத் தமிழறிவை ஊட்டியவர். வின்ஸிலோ அகராதி இவருதவியானே நிறைவேறியது.

இப்போதும் யூனிவர்ஸிட்டி லெக்ஸிகன் ஆபீசுக்குத் தமிழ்ப்பண் டிதராயமர்ந்து அதற்குரிய ஸபைபாரானும் ஸபைத்தலைவரானும் பல கானும் அறிவானும் குணத்தானும் புகழப்படுகின்ற தமிழ்ப்பண்டிதான என னருமை யம்மான்சேய் ஸ்ரீமாந்-மு. இராகவையங்காரவர்கள் இவ் விராமநாதபுரச் சேதுபதிகளா லாதரிக்கப்பட்ட வித்வத்பாம்பரையின ராய் நம் மாட்சிபொருந்திய சேதுபதிமஹாராஜாவர்க ளன்புக்குரியரா யிவ்வூராயிருத்தல் ஈண்டைக்கு நோக்கத்தகும்.

தமிழிலுள்ள எல்லா நூல்களினும் தொல்காப்பியம் திருவள்ளுவர் இரண்டும் மிகச் சிறந்தன. அவ்விருநூலையும் முதற்கண் உலகுக்கு அச்சிடத்தொடங்கினரிருவரும் இச்சேதுநாட்டாரே. தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியருரையுடன் முதற்கண் அச்சிட்டுதவினர் சேதுநாட்டு மழவராயனேந்தல் மகாலிங்கையர் என்பார். இவர் சென்னைச் சர்வகலாசாலைத் தலைமைப்பண்டிதராக இருந்தவர். திருக்குறள் 63 அதிகாரங்களைப் பரிமேலழகருரையுடனும், அதற்குத் தெளிபொருள்விளக்கத்துடனும், உருதுரையின் ஆங்கிலமொழிபெயர்ப்புடனும் முதற்கண் வெளியிட்டவர் இவ் விராமாநுசகவிராயரே. இவர் பாற்பயின்ற டாக்டர் போப் தாமியற்றிய திருக்குறளாங்கிலமொழி பெயர்ப்பு முகவுரைக்கண் இவருடைய கல்வித்திறத்தைப் பல்லாற்றானும் புகழ்ந்துளர். கல்வியில்லாமல் நெடிதுகழித்துப் பின் கலைமகள்கோயில் புக்குப் பன்னாள்வேண்டியும் கல்விபெறாது மனநொந்து உயிர்துறப்பானெண்ணித் தன் கழுத்தை வாளாலறுக்கும்போது நாமகள்தோன்றி யனுக்கிரகித்ததனாலுடனே இவர்க்குக் கல்விவன்மையுண்டாயிற்றென்றும், பின் அறுத்தபுண்ணாறித் தழும்பாயிற்றென்றும் அதை, தாங்கண்கூடாகக்கண்டதென்றும், இவ்வரலாறு அவர் பொய்யாவாயானே கேட்டதென்றும் டாக்டர் போப் தம் திருக்குறள்முகத்து வரைந்துளர்.

பெரியசரவணக்கவிராயர்:—இவர் சேதுநாட்டு முதுகுளத்தூரினர். இவர் அவதானசக்தியைப் பலரும் வியப்பர். இவருடைய கல்விப்பெருமிதம் சவ்வாதுப்புலவருக்குமேம்பட்டது. இவர் சேதுமுதற் சென்னைவரை ஆங்காங்குள்ள பிரபுக்களாற் கொண்டாடப்பட்டுச் சம்மானிக்கப்பட்டவர். சோமசுந்தரகுருவினிடத் தளவிலா அன்புபூண்டவர். சேதுபதிநன்றியையே எந்தப்பிரபுவிடத்தும் வாயாரப் புகழ்ந்து பாடுபவர். இவர் ஒருவனைக் கெடவும் வாழவும் பாடவல்லவர். இவருடைய செய்யுணடை கற்றோர்க்குப் பெரிதும் இன்பம் பயப்பது. இவர்பாடிய பிரபந்தங்களின்பெயர்களையும் பிரபுக்கள்பெயர்களையும் இவர் அவர்பாற் பெற்ற வரிசைகளையும் எண்ணி யெழுதின் இவ்வியாசம் இடம்போதாதாதலாற், சேதுபதிசம்பந்தமாக இவர்பாடலிற் காணப்படுவனவற்றை ஈண்டைக்கோதுவேன்.

"அரசரிலுயர்ந்ததுரையாரெனிற்சேதுபதி
யாகுமவன்மணிவாயலி
லகத்தியமுனிக்குமதிகங்கற்றபேர்களா
யாயிரங்கவிவாணருண்
டவரிலொருசிறுவன்யான்பாடவறியேனென்
றகற்றிவிட்டார்களென்னை
யாதலாற்பூமியிற்சஞ்சரித்தேனின்
னகந்தனின்மகிழ்ந்தருள்வையே"

"மகாராஜராஜருந்திறைதருஞ்சேதுபதி
வாசற்கவிப்ரசங்கன்
வண்டமிழிலக்கணச்சோமசுந்தரகுருசு
வாமியடிமைக்குமடிமை"

"அட்டதிசைபணிசெயுஞ்சேதுபதிமணிவாச
லட்டாவதானசிங்கம்"

"வித்வசனசேகரன்சேதுபதிவாசலில்விளங்குநவரத்னதீபம்"

"மகபதிநராதிபதிநீதிபதிசேதுபதிவாசற்ப்ரசண்டவாக்கி"

"செயராமநாதனேதெய்வந்தனுக்கோடிதீர்த்தமேதீர்த்தமெங்கள்
சேதுபதியேராஜனெனவணங்கார்களைச்சீறிவாயைக்கிழித்து"

இவற்றால் இவருடைய ராஜபத்தியுங் குருபத்தியும் அறியலாம். இவர்,

"சேதுபதிவாசற்ப்ரதானிமுத்திருளப்பசிங்கவேறெதிர்ந்துகாண்க
செந்தமிழ்க்காதற்ப்ரபந்தமொன்றுன்மீதுசெய்துவந்தனமகிழ்ந்தே"

என்பதனாற்பிரதானிமுத்திருளப்பபிள்ளைமீது காதலொன்றுபாடியுள்ளாரென்று தெரிவது. மற்று மிவர்பாடியது பணவிடுதூது என்றொன்றுண்டு. இவர்வாக்குச்சாதுர்யத்தை,

"வாருநீர்யாரென்னவித்துவானென்னவுமதிமோசம்வந்ததென்றே
வாய்குழறிமெய்யெலாமிகநடுக்குற்றுநீர்வந்தகாரியமேதெனச்
சீருலாவியகாமதேனுவேதாருவேசிந்தாமணிக்குநிகர்வோய்
செப்புவசனத்தரிச்சந்த்ரனேயெனலுஞ்சினந்திருகணுஞ்சிவந்தே
ஆரைநீமாடுகன்மரமென்றுசொன்னதுமலாலரிச்சந்த்ரனென்றே
யடாதசொற்சொன்னையேயார்க்கடிமையாகிஞானூர்கையிற்பெண்டுவிற்றேன்
தீருமோவிந்தவசையென்றுரைசெய்வெகுகொடியதீயரைப்பாடிநொந்தேன்
திருமன்றுணடுநின்றுநடமொன்றுபுரிகின்றதென்றில்லைநடராஜனே"

என்னும்பாடலானுமறிக. இவர் ஆங்காங்கு நிகழ்த்தியவற்றை,

"அரியலூர்வீரன்மேற்பாடியவனொருவீட்டையாயிரம்வீடாக்கிவைத்தோம்
அம்மைநாதன்பேரில்வண்ணம்படித்தவனையரசுகிலையிட்டுவைத்தோம்
ஆப்பனூர்க்குறவஞ்சிபாடியேகோடையுடனுடையும்விளையவைத்தோம்
ஆனந்தநாதனுக்குப்புதுச்சேரிதனிலழியாச்செல்வங்கொடுத்தோம்
கருதியசரதுநபாபுவையெதிர்வரச்சொலிக்காயிதமனுப்பிவைத்தோம்
கடலாடிமுத்துக்கருப்பணன்வணந்தனைக்கற்றோர்க்கமுதமாக்கினோம்
காரைநகர்லக்ஷ்மணமுதலிபுகழ்பெறநங்கடைக்கணுறப்பார்த்துவிட்டோம்
கவித்தலந்தன்னின்முத்தயமூப்பனைக்கற்பகாலமுமிருக்கவைத்தோம்
வரிசைபெறுபஞ்சமால்பண்டாரமுத்யோகமாறுதிருக்கவைத்தோம்
மற்றுமவனுக்கிளையபிச்சாண்டிசெட்டிக்குவச்ரதேகங்கொடுத்தோம்
வாடும்பயிர்க்குத்திருக்கூடலூரிலேமழைபெய்யநாம்பாடினோம்
மகமதுத்தம்பிக்குசீழ்சாகாவரத்தைக்கொடுத்துவிட்டோம்
திருவையாற்றுச்சுப்ரமண்யபிள்ளைக்குச்சிரஞ்சீவிதனையளித்தோம்
சேதுபதிவாசலவதானியாநம்மஹிமைதெரியாதபேருமுண்டோ
தெள்ளமுதுபோலவென்னுளமீதுபாடிவருசெந்தமிழ்நிறுத்தலாமா
சிவகங்கையரசுபுரிகவுரிவல்லவராசசெகமண்டலாதிபதியே"

என்னும் அரியபாடலா னறிந்துகொள்க.

இவர்புத்ரர் அருணசலக்கவிராயர். இவர் சிவகங்கைக் கவுரிவல்லவ ராசரையும் கனிவாடித்தலைவரையும் பாடிய ஓலைத்தூக்கிற் சேதுபதியைப் புகழ்ந்துளர்.

"கைக்கடாசலகோடிதருசேதுபதிராசகர்த்தன்வாசற்ப்ரசங்கம்
கருதுவிருதவதானிசரணவப்பெருமாட்கவீச்சுரன்பெற்றரத்னம்
கமலைநாமகள்வளர்நிதாணியருணசலக்கவிவலவனெழுதுமோலை"
"தடக்கடலிடப்புவிபுரக்குமகுடத்தரசரிற்பெரியசேதுபதிவா
சலிற்கனமகத்துவமிகுத்தடுசிதத்துவசனப்ரபலசற்சனபரன்"

என வருதலா னறிக.

இவர்புத்ரர் சிறியசரவணக்கவிராயர்:—இவர் பெரிய அவதானி. இவர் பாடியன குன்றைச்சிலேடைவெண்பா, திருச்சுழியலந்தாதி, மதுரையமகவந்தாதி முதலிய பலவாம். இவர் சேதுவேந்தர்பாற் பல்லக்குமுதலிய வரிசைபெற்றார்.

சுப்பிரமணியக்கவிராயர்:— இவர் சேதுநாட்டுச் சிவகங்கையைச் சார்ந்த ஆண்டுகொண்டான் என்றவூரினர். சேதுபதிமந்திரி கோட்

டைத்தேவர்மீது திருமணக்குறவஞ்சி பாடியவர். இவர் கவித்திறம் யாரும் புகழ்வது. இவரை ஆண்டுகொண்டான்கவிராயர் என்று வழங்குவர். இசைப்பதங்கள் பாடுதலிலும் வல்லவர். வடகலையிலும் கவிதை சொல்ல வல்லவர். இவர்பாற் கல்விகற்றவர் மழவராயனேந்தற் சின்னச்சாமி ஐயர் என்பார். இவ்வையர் பாடியது பெரியபுராணக்கீர்த்தனை.

கிருஷ்ணையங்கார்:—இவர் என்னருமை மாதுலர். சேதுபதி சின்னப் பிரதானி கிருஷ்ணையங்காருடைய பேரன் புதல்வர். அஷ்டாவதானத்தில் அதிக நிபுணர். வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லவர். சமய நூலாராய்ச்சி பெரிதுமுடையர். இவருடைய நுண்ணறிவோடு கூடிய வாதவன்மை, வடமொழிக்கடனிலைகண்டவரும் சேதுவேந்தராலும் சேதுபதிமதிமந்திரி உலகம்புகழும் பொன்னுச்சாமித்தேவராலும் மிகவும் வெகுமானிக்கப்பெற்றவரும் பாதகண்டமுழுதும் புகழும் கல்வி அறிவொழுக்கங்கள் நிரம்பியவருமான மஞ்ஞர்குடி ராஜுசாஸ்திரிகளாலும் மெச்சப்பட்டசிறப்புடையது. இவர்கவித்திறத்தை யடியில்வரும் வெண்பாவா னுய்த்துணர்ந்துகொள்க.

> "முக்காலோர்காலுக்குமூரிச்சிறப்புடைத்தென்
> றெக்காலும்பேசவெழாரங்குப்—புக்காரும்
> வண்டிருக்கப்பெற்றவருகவிராமன்பவனி
> கண்டிருக்கப்பெற்றார்களேல்."

முக்கால்-பரலோகம். ஓர்கால்-உலகம். வண் திருக்கு அப்பு எற்றவளவியகண்ணினின்று ஆனந்தநீர் எற்றுநிற்க எ—று. இவர் சேதுபதியைப் பாடிய வெண்பா:—

> "சொன்னவருண்ணுவைத்துணிப்பேனவர்சிரத்தைச்
> சின்னபின்னமாகச்சிதறுவேன்—முன்னுதமிழ்த்
> தென்னன்முத்துராமலிங்கச்சேதுபதிபோலவொரு
> மன்னனுளனென்றுண்மதித்து"

என்பது.

முத்துச்சாமிஐயங்கார்:—இவர் என்னருமை மாதுலரும் எனது தமிழாசிரியருமாவர். இத்தமிழ்ச்சங்கத்தைத்தொடங்கிநடத்திய பெரிய தமிழபிமானியாகிய பாண்டித்துரைத்தேவர்க்கும் தமிழாசிரியர் இவரே. இவர் அதிபாலியத்திற் கன்னடநாட்டரசராகிய கிருஷ்ணராஜஉடையார் முன்பு கன்னடபாஷையிலே அஷ்டாவதானம்புரிந்து பல்லக்கு, குடை,

முத்துமாலை, பொற்குவை: இவை பரிசிலாகப்பெற்றவர். இவருடைய உரைவன்மையுங் கவித்திறமுங் கற்றூர்பலரும் புகழ்வன. இவரியற்றிய நூல்கள், சந்திராலோகம், மணவாளமாமுனிநூற்றந்தாதி, நாற்றெட்டுத் திருப்பதிப்பதிகங்கள், குருகைக்கலம்பகம் முதலியன. இத் தமிழ்ச்சங்கம் இவர்பாற் சிறப்பித்து நன்றிபாராட்டுங் கடப்பாடுடைத்து ; என்னையெனின், தமிழ்ச்சங்கஸ்தாபகரான பாண்டித்துரைத்தேவர் இவர் மாணுக்கராதலானும், "செந்தமிழ்"ப்பத்திரிகையை முதற்கட்டொடங்கி நடாத்திய ஏழையேன் இவருக்கு அன்புள மருகரும் மாணுக்கருமாதலானும், எனக்குப்பின் அப்பத்திரிகையைச் சீர்பெற நடாத்திஞராகிய வித்வான் மு. இராகவையங்கார் இவர்திருக்குமாரர் ஆதலானும், அவர்க்குப்பின் இப்போது அப்பத்திரிகையை இனிதுநடத்தும் வித்வான், திரு. நாராயணையங்கார் இவர்மாணுக்கராதலானும், கலாசாலைப் போதகாசிரியராயுள்ள வித்வான் அரங்கசாமிஐயங்கார் இவர் மாணுக்கராதலானுமென்க. இவர் அளவிலாக்கருணையே ஏழையேனை இப்பேரவைக்கண் நிறுவியது. இவர் சேதுபதியன்னப்ரபாவத்தாற் றமிழ்வளர்த்தவரென்பதியான்கூறித் தெரியவேண்டியதன்று. இவர் அவதானசக்தி திரிசிரபுரம் மஹாவித்வானும், இத்தமிழுலகுசெய்த தவப்பயனாக விளங்கிய மஹாகவியும், நூற்றுக்கணக்கான பெருந்தமிழறிஞர்க்கெல்லாம் நற்றமிழாசிரியருமான மீநாக்ஷிசுந்தரநாவலரான் வியந்து பாராட்டப்பட்ட சிறப்புடையது.

இத் தமிழ்வலாரன்றிச் சாத்தணிச் சரவணைப்புலவர், முத்துவேலாயுதக்கவிராயர், சுப்பிரமணியக்கவிராயர், கருங்குளம் சங்கரநாராயண அவதானி, சொக்குப்புலவர், நாகலிங்கப்புலவர், அநந்தகவி, மாசிலாமணிப்பண்டாரம், ஆவிடைநாதர், பெரியமுத்துமாரியப்பக்கவிஞர், திருப்புத்தூர் வாலசரசுவதி சிறியமுத்துமாரியப்பக்கவிராயர், வேலாயுதக்கவிராயர், முத்துவீரப்பக்கவிராயர், நரசிம்மபாரதி முதலிய பலர் செந்தமிழறிஞராய் இச் சேதுவேந்தரால் வரிசை பல பெற்று வாழ்ந்தனரென்றும் தெரியலாம். "மொய்யார்கலிசூழ்முதுபாரின்முகந்துதானக், கையார்புனலானனையாதனகையுமில்லை" என்றபடி முற்காலந்தொட்டு இக்காலம்வரை சிறந்ததமிழ்ப்புலவராயினர் பெரும்பான்மையாக எல்லாரும் இச் சேதுபதிகள்வண்மைபெற்றனரேயாவர் என்பது சிறிது ஆராய்ந்துபார்க்குமிடத்துப் புலனும்.

மன்னார்கோயிலில் வடமொழிக்கடனிலேகண்ட பிரும்மஸ்ரீ ராஜு சாஸ்திரிகளும், பெரியதமிழறிவாளரும் சிறந்த சைவாநுஷ்டானசீலரும் உபகாரியுமாகிய நல்லூர் ஆறுமுகநாவலரும் இச்சேதுவேந்தர் மதிமந்திரி உலகுபுகழும் பொன்னுச்சாமித்தேவரவர்கள் கைவண்மைக்குப் பாத்திரானசிறப்புப் பண்டே யாவரும் அறிந்தது.

இவ் வாறுமுகநாவலர் வெளியிட்ட அரியபெரிய நூல்களனைத்தும், இச் சேதுவேந்தர்பொருளையே துணையாகக்கொண்டன என்பது அவ் வந் நூன் முகவுரையானும் சிறப்புப்பாயிரச் செய்யுட்களாலும் நன்றுணர்ந்துகொள்ளலாம். முற்காலத்தும் சேதுநாடாண்ட பாண்டியராலே தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது. இக்காலத்தும் அந்நெறிதவறாது சேதுநாட்டுப் பாண்டியராலே இச்சங்கம் சீர்பெற நிறுவப்பெற்றது. தமிழ் என்றும் பாண்டியர்தமிழேயன்றோ? "வீயாத்தமிழுடையான் பல்வேற்கடற்றானைப்பாண்டியன்" என்பது பழையவழக்கு.

அத்தகைப் பாண்டியர்க்குப்பின் அவ்வருமைப்பெயர்புனையத்தக்கார் இச்சேதுபதிமரபினரே என்பது மேற்கூறியவாற்றான் இனிது விளங்கும். இச்சேதுபதிகள் தமிழ்மாட்டு அன்பும் ஆதரவும் உடையர் என்பதுமட்டுமன்றித் தமிழ்க்கல்விவன்மையுமுடையரென்பது, "கவிமதுர, வாக்குந்தழைத்த ரகுநாதன்" என ரகுநாதக்கோவையிற் கேட்கப்படுதலானும், மாட்சிபொருந்திய மஹாராஜாவர்கள் திருப்பாட்டனாராகிய முத்துராமலிங்கசேதுபதியவர்கள் முதலாக மூன்றுதலைமுறைச் சேதுபதிகள் இனிய தமிழ்க்கவிவலராயிருத்தல் இங்குள்ளார் பலர் கண்கூடாகக்கண்டதொன்றாதலானும் யான் வேறே புதிதாக உரைக்கவேண்டுவதொன்றன்று. தளசிங்கமாலையினும் "கானையினீசர் பதம்போற்றியேத்தி" என்றார். இதற்கேற்பவே தளவாய்சேதுபதி கானப்பேரெயில் ஈசரைப்பாடிய பாடல்கள் அத்தலத்து இன்றும் வழங்குவன. அவகாசமின்மையால் அவற்றைப் பெற்று ஈண்டெழுதிக்காட்ட இயலவில்லை.

நம் மாட்சிபொருந்திய மஹாராஜாவர்கட்குத் திருத்தந்தையாரும் பெருங்கொடைவள்ளலுமாகிய பாஸ்கரசேதுபதிமகாராஜா இத்தமிழின் பால்வைத்த அன்பு அவர்கள் இச்சங்கத்துக்களித்த பெருங்கொடையானும், பிறநாட்டரசரை இத்தருமத்தில் தூண்டிப் புரிவித்த நல்லுதவிகளானும், தமிழ்ப்புலவர்க்களித்த பெருங்கொடையானும் யாவரும்

அறிந்ததேயாதலின், பெயர்த்துங் கூறவேண்டியதொன்றன்று. இவர்களது தமிழபிமானத்தையும், தமிழ்வண்மையையும் யான் பலகாலும் அனுபவித்துள்ளேன். பாஸ்கரசேதுபதிபண்ணிய புண்ணியமெல்லாந் திரண்டு ஓருருவெடுத்தனைய நம் சேதுபதி மஹாராஜா அவர்கள் இச்ஸேதுராஜ்யாபிஷேகஞ்செய்தருளிய காலந்தொட்டு இத்தமிழ்மாட்டுத் தம் பெருங்குலத்தோரொப்ப ஆராவன்புகாட்டி ஒவ்வொரு சரஸ்வதி பூஜையினும் பெருந்தமிழ்ப்புலவரையழைத்தளிக்கும் பெருங்கொடையாமெல்லாங் கண்கூடாகக்கண்டதொன்றே. இதனை,

"புலவரைப்போற்றுவதேகலைவாணிக்குப்பூசையென்று
நிலவரைப்பாள்கின்றவேந்தரினின்போனினைந்தவர்யார்
சலவரைப்போற்றுதல்செய்யாமலென்றுந்தலைசிறந்த
நலவரைப்போற்றியசீராஜராஜநரேந்திரனே"

என்றியான் அன்பாற் பாடியுள்ளேன். இக்காலத்துள்ள சிறந்த தமிழ்ப்புலவரில் இச்சேதுபதிமன்னரை உள்ளவாறுபுகழாதார் ஒருவருமிலரென்றுசொல்லத்துணியலாம். இதனால் இத்தமிழ்வளர்க்குந்தருமம் இம்மன்னர் குலதருமமென்பது தெளிவாம். இத்தகைத் தமிழ்வேந்தரைத்தலைவராப்பெற்றது இத்தமிழ்ச்சங்கத்துக்குப்பெருஞ்சிறப்பேயாம்.

இத்துணையுங்கூறியவாற்றால் இச்சேதுநாடு முன்புதொட்டுத் தமிழாற் சிறந்ததென்பதும், சேதுவேந்தராதரவாற் றழைத்த தமிழாசிரியர் பலரான் மலிந்ததென்பதும், புண்ணியச்சிறப்புடன் தமிழ்வளர்த்தசிறப்பும் இதற்கே யுரியதென்பதும், பிற்றைக்காலத்தரசர் எல்லாரினும் இச்சேதுவேந்தரே தமிழபிமானிகளாய்த் தமிழ்காத்தவரென்பதும் நன்றுபுலனாம். இத்தகைச் சேதுமன்னர்திருமரபும் அவர்போற்றும் திருத்தமிழும் தமிழ்வள்ளன்மையும் நீடுவாழ்கவென்று வாழ்த்துவதுடன் இத்தமிழ்ச்சங்கத்துக்கும் அதன் தலைவராயுள்ள நம் மஹாராஜாவர்கட்கும் எல்லாநன்மையுந் தந்தருளுமாறு எல்லாம்வல்ல இறைவன்றிருவடிகளைச் சிந்திக்கின்றேன்.

முற்றும்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 8 | நிலையிற் | நிலையில் |
| 10 | 2 | தேன்னுடைய | தென்னுடைய |
| ,, | 21 | கண்டனே | கண்டேனே |
| 12 | 1 | இவராசியரான | இவராசிரியரான |
| 16 | 5 | தலையா | தலையாய |
| 30 | 13 | யருருச்சனை | யருச்சனை |
| ,, | 20 | அனைத்துலங்குங் | அனைத்துலகுங் |
| 42 | 5 | ஸேது | சேது |